
# EASTERN UNIVERSITY, SRI LANKA

PER ARDUA AD SCIENTIAM






# වාර්ෂික වාර්තාව

# வருடாந்த அறிக்கை - 2016

# ANNUAL REPORT

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

**பேராசிரியர். T. ஜெயசிங்கம்**

**உபவேந்தர்**

## தூரநோக்கு

இலங்கையில் உயர் கல்விக்கான சிறந்த மையமாக விளங்குவதே இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தினது தூரநோக்காகும்.

## நோக்கம்

தகுதிவாய்ந்த பட்டதாரிகளை உகந்த சமூகத்தினூடாக கைத்தொழில்-சமூக ஒத்துழைப்புடன் சமூக பண்பாட்டுத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக கற்றல் ஆராய்ச்சி மற்றும் அறிவைப் பரப்புதலுக்கு வசதி செய்தல்.

## தொடர்பு

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
வந்தாறுமூலை
செங்கலடி - 30350
இலங்கை.

தொலைபேசி (பொது): +94 65 22 40490
+94 65 22 40580
+94 65 22 40590

தொலைநகல் (பொது): +94 65 22 40730

மின்னஞ்சல்: reception@esn.ac.lk

இணையதளம்: www.esn.ac.lk

## இலக்குகள்

இலங்கைக் கிழக்குப் பல்கலைக்கழகமானது பின்வரும் குறிக்கோள்களுடன் கூடிய இலக்குகளை அடையாளம் கண்டுள்ளது.

**1.** கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் அறிவைப் பரப்புதல் என்பவற்றில் சிறந்து விளங்குதல்.

1.1 தேசிய மற்றும் சர்வதேசத்தின் மாறிவரும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஏற்றவாறான வேலைவாய்ப்புகளுடன் கூடிய பட்டதாரிகளை உருவாக்குவதற்கு ஏற்றவாறு பாடத்திட்டங்களை மீண்டும் புதுப்பித்தல்.

1.2 பாடத்திட்டத்தின் தரம் மற்றும் பொருத்தப்பாட்டினை மேம்படுத்தல்.

1.3 நிறுவனத்தின் ஆராய்ச்சி திறனை அதிகரித்தல்.

1.4 அறிவைப் பரப்பும் செயற்பாடுகளை ஊக்குவித்தல்.

**2.** மனிதவளம், உட்கட்டமைப்பு மற்றும் ஏனைய வளங்களை விருத்தி செய்வதன் மூலம் நிறுவனத்தின் திறனை அதிகரித்தல்

2. 1 ஊழியர்களின் கல்வி அறிவை மேம்படுத்துதல்

2. 2 நிறுவனத்தின் திறனை வலுப்படுத்துவதற்காக உட்கட்டமைப்பு மற்றும் ஏனைய வளங்களை பாதுகாத்தலும் மேம்படுத்தலும்

**3.** சமூகத்தின் சமூக பொருளாதார மற்றும் கலாசார தேவைகளுக்கு ஏற்ப சேவையினை வழங்கல்

3. 1 வாய்ப்புகளை ஏற்படுத்துதல்

3. 2 சமூகத்தின் பாரம்பரியம், கலாச்சாரம் மற்றும் மனித மதிப்புக்களை பாதுகாத்தல் மற்றும் வளப்படுத்துதல்

**4.** சிறந்த ஆளுகையினைப் பராமரித்தல் மற்றும் மேம்படுத்தல்

4. 1 வளங்களை சிறப்பாகவும் திறமையாகவும் பயன்படுத்துதல்

4. 2 பல்கலைக்கழக சமூகத்தினரிடையே சமூக ஒற்றுமையை அதிகரித்தல்

## பொருளடக்கம்


3.உபவேந்தரின் மதிப்புரை: ........ 1
3.1 உபவேந்தரின் அறிக்கை: ........ 1
3.2 சிறப்பம்சங்கள் 2016 ........ 3
3.3 மீள்பார்வை ........ 5
a. பீடங்கள் மற்றும் கற்கைநெறிகள்: ........ 5
b. புதிய பீடம் மற்றும் கற்கைநெறி ........ 7
c. பல்கலைக்கழகத்தின் நிறுவனக் கட்டமைப்பு ........ 8
d. பேரவை ........ 9
e. மூதவை ........ 10
3.4 தோல்வி மற்றும் நியாயம் ........ 13
3.5 எதிர்காலத் திட்டம் ........ 13
4.வளங்கள் மற்றும் மாணவர் விபரம்: ........ 14
4.1 மாணவர் பரம்பல் ........ 15
உள்நாட்டு மாணவர்கள் : ........ 15
வெளிநாட்டு மாணவர்கள்: ........ 16
4.2 ஊழியர்களின் வளங்கள் ........ 16
4.3 கல்விசார் ஊழியர்களின் விபரம் ........ 19
4.4 கல்விசாரா ஊழியர்களின் விபரம்: ........ 22
4.5 வளங்கள் மற்றும் சேவைகளின் செயல்திறன் குறிகாட்டிகள் ........ 24
மாணவர் திருப்திநிலை ஆய்வு ........ 24
பட்டதாரிகளின் வேலைவாய்ப்பு ........ 26
5.நிதி நிலைமைகள் ........ 27
5.1 2016 மார்கழி 31ஆம் திகதி கருவூலத்தால் வெளியிடப்பட்ட நிதி நிலை பற்றிய அறிக்கை ........ 27
5.2 மீண்டெழும் செலவீன விபரம் ........ 27
5.3 மூலதனச் செலவு விபரங்கள் ........ 28
செயற்திட்டங்களின் விபரம் (உள்நாட்டு/ வெளிநாட்டு நிதிகள்) ........ 28
செயற்திட்டங்களின் செலவு விபரம் (உள்நாட்டு/ வெளிநாட்டு நிதி) ........ 29
5.4 நிதி நிலைமை பற்றிய விபரம் (செலவு): ........ 31
5.5 நிதி நிலைமை பற்றிய விபரம் (பிறப்பிக்கப்பட்ட வருமானம்): ........ 31
5.6 நிதி செயற்றிறன் ஆய்வு - 2016: ........ 32
5.7 2016 ஆம் ஆண்டில் பெறப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளின் விபரம்: ........ 32
5.8 நிதி அறிக்கைகள் 2016 ........ 34
6.சாதனைகள் ........ 38
6.1 ஆராய்ச்சிகள், கண்டுபிடிப்புக்கள் மற்றும் வெளியீடுகள் பற்றிய விபரம் ........ 38
6.2 அறிவியல் வலை மூலம் (Web of Science) குறியிடப்பட்ட ஆய்வுப் பத்திரிக்கைகளில் 2016 இல் வெளியிடப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் ........ 40
6.3 பெறப்பட்ட விருதுகள்: ........ 41
2016 இல் பெறப்பட்ட ஆராய்ச்சிக்கான விருதுகள் ........ 41
விளையாட்டில் மாணவர்களின் சாதனைகள் ........ 42
6.4 நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகளின் விபரங்கள் ........ 43
6.5 புதிதான ஆரம்பிக்கப்பட்ட கற்றைநெறியின் விபரம் ........ 44
7.உள்ளகக் கணக்காய்வு ........ 45
7.1 2016ஆம் ஆண்டிற்கான கணக்காய்வுக் குழுத் தலைவரின் அறிக்கை ........ 45
7.2 இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின், 2016 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மீது 1978 இன் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை ........ 50
7.3 இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2016 மார்கழி 31ல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுகள் மீது 1978ஆம் ஆண்டு 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(1)ஆம் உப பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை தொடர்பில் கிழக்குப் பல்கலைக்கழக முகாமைத்துவத்தின் பதிலளிப்பு ........ 67

# 3. உபவேந்தரின் மதிப்புரை:

## 3.1 உபவேந்தரின் அறிக்கை:



கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கையின் 2016ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த அறிக்கைக்காக இந்த செய்தியை எழுதுவதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

தற்போதைய யுகத்தில் பல்கலைக்கழக கல்வியின் நோக்கம், உள்நாட்டிலும், பிராந்திய மற்றும் உலகளாவிய ரீதியிலும் தங்களைத் தாங்களே தக்கவைத்துக் கொள்வதற்கு தகுதியுள்ள திறமையான அறிவாளிகளை உருவாக்குவதாகும். உயர் கல்வியின் எதிர்கால நோக்கம் ஆராய்ச்சியாகும் மேலும் கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கையும் கருசார் ஆராய்ச்சியில் ஈடுபட அதன் கல்வியியலாளர்களை ஊக்குவித்துவருகிறது. சமூக ஈடுபாடு மற்றும் எல்லை கடந்த சேவைகள் என்பனவும் பல்கலைக்கழகத்தின் ஒருங்கிணைந்த பணியாகும்.

தகுதிகாண் அதிகாரி ஒருவரின் ஒருவருட (2015) பதவிக்காலத்தின் பின் புதிய உபவேந்தரினால் கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கையின் அலுவலகப் பொறுப்புக்கள் ஏற்றுக் கொண்ட தனித்துவமாக ஆண்டாக 2016ஆம் ஆண்டு திகழ்கிறது. இருப்பினும், பேராசிரியர் உமா குமாரசுவாமி அவர்கள் தகுதிகாண் அதிகாரியாக இருந்தமை எமது அதிஸ்டமாகவே கருதுகிறோம், அவருடைய முன்னெப்போதுமில்லாத அணுகுமுறை எமது பல்கலைக்கழகத்தை பயனுள்ள சரியான பாதையில் இட்டுச்சென்றதோடு 2016ஆம் ஆண்டில் முன்னேற்றத்தையும் காட்டியது.

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கையின் வரலாற்றில் வண்ணமயமான ஓர் வைபவத்தின் மூலம் உபவேந்தர் அவர்கள் வைபவ ரீதியாக பதவியேற்றுக் கொண்டது இதுவே முதல் தடவையாகும் மற்றும் பிரதி உபவேந்தரும் நியமனம் செய்யப்பட்டார். பாலின சமபங்கு மற்றும் சமத்துவத்திற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதோடு 2016ஆம் ஆண்டு ஆனி மாதம் பாலின சமபங்கு மற்றும் சமத்துவத்திற்கான செல் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டதனூடாக “பாலின சமபங்கு மற்றும் சமத்துவத்திற்கான கிழக்குப் பல்கலைக்கழக கொள்கைக் கட்டமைப்பினை” செயல்படுத்தும் நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

கல்விசார், நிர்வாக மற்றும் ஏனைய ஊழியர்களின் திறமைகளைக் கட்டியெழுப்புதல் 2016ஆம் ஆண்டின் நோக்கமாகக் கொள்ளப்பட்டது. மேலும் வெளிநாட்டு மையங்கள் மற்றும் ஊழியர் அபிவிருத்தி மையம் என்பவற்றிற்கூடாகவும் இதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இத்தகைய நிகழ்ச்சித்திட்டம் தாய்லாந்து ஆசிய தொழிநுட்ப நிறுவனத்தினூடாக ஆரம்பிக்கப்பட்டு 2017ஆம் ஆண்டும் தொடரவிருக்கிறது. ஊழியர் அபிவிருத்தி நிலையத்தினூடாக ஊழியர்களுக்கான பல பயிற்சிப் பட்டறைகள் மற்றும் பயிற்சியளிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. மேலும் 2016ஆம் ஆண்டு ஆனி மாதம் பேரவை உறுப்பினர்களுக்கும் பல்கலைக்கழகத்திலுள்ள முக்கிய உறுப்பினர்களுக்குமான மூலோபாயத் திட்டமிடல் மீதான பயிற்சிப் பட்டறை நடாத்தப்பட்டது. “நிறுவன முடிவுகள் கட்டமைப்பு” (ORF) தொடர்பான பயிற்சிப் பட்டறையானது சித்திரை, 2016 அன்று நடாத்தப்பட்டது.

பல்கலைக்கழகத்தில் ஒழுக்கத்தை நிலைநாட்டும் அமைப்பு முறையை (Proctor System) அறிமுகப்படுத்தியதனூடாக மாணவர்களின் ஒழுக்கமுறை எழிதாக்கப்பட்டது. 2015ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட “மாணவர் சாசனம்”, கடைபிடிக்க வேண்டிய தேவையான

தகவல்களுடன் புதிய மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டது. மாணவர்களின் தேவைகளுக்கு ஏற்றவாறு மாணவர் ஆலோசனை சேவைகள் தொடர்ந்தும் வழங்கப்பட்டுவருகிறது. பல்கலைக்கழக நாட்காட்டியினைத் தயாரிக்கும் அத்தியாவசிய வேலைகள் முன்னெடுக்கப்பட்டுவருகிறது.

2016ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட மாணவர் திருப்திநிலை பற்றிய ஆய்வின் மூலம் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் வாழ்க்கை மீதான பல்வேறு அம்சங்கள் ஒட்டுமொத்த மாணவர் திருப்திநிலை உள்வாரி இளங்கலைப் பட்டதாரிகளுக்கு 75% ஆகக் காணப்படுகிறது. எதிர்வரும் ஆண்டுகளில் இதில் மேலும் முன்னேற்ற நிலைமை காணப்படும்.

பல புதிய கற்கை நெறிகள் திட்டமிடப்பட்டுள்ளன. "தொழில்நுட்ப பீடத்தினை" நிறுவுவதற்கான அரசின் கொள்கை உணரப்பட்டுள்ளது. மேலும் இதற்கான பாடத்திட்டம் தாய்லாந்து ஆசிய தொழிநுட்பக் கழக நிபுணர்களின் உதவியுடன் வடிவமைக்கப்பட்டது.

பல்கலைக்கழகத்தின் உட்கட்டமைப்பு வளர்ச்சி திருப்திகரமாக நடைபெற்று வருகிறது. கடந்த காலங்களில் ஓரளவு புறக்கணிக்கப்பட்டிருந்த குறிப்பிட்ட அளவான எமது சொத்துக்களுக்கு உரிமையினைப் பெறும் செயற்பாடுகளை நாம் முன்னெடுத்து வருகிறோம். சௌக்கிய பராமரிப்பு பீடம், விவசாய பீடம், தொழிநுட்ப பீடம் மற்றும் ஊழியர் விடுதி போன்ற கட்டிடத் தொகுதிக்கான ஆரம்பக் வேலைகள் 2016ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஒதுக்கப்பட்ட நிதியில் 95% பயன்படுத்தப்பட்டுள்ளதால், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கைக்கு ஒதுக்கப்பட்ட நிதிகளின் மேலான்மை பற்றி நாங்கள் திருப்பியடைகிறோம். எதிர்வரும் ஆண்டுகளில் மேம்பட்ட செயற்திறனை எதிர்பார்க்கின்றோம்.

இருப்பினும், நாம் பகிடிவதையை முற்றாக இல்லாதொழித்தல், பட்டதாரிகளின் வேலைவாய்ப்பினை மேம்படுத்தல் மற்றும் ஊழியர் எண்ணிக்கை மற்றும் வசதிகளை அதிகரித்தல் ஆகியவற்றில் எமது நோக்கத்தினை அடைந்து கொள்வதில் சற்று குறைவாகவே உள்ளோம். இவை எதிர்வரும் ஆண்டுகளில் உணரப்படும்.

இறுதியாக, 2016ஆம் ஆண்டில் திருப்திகரமான செயல்திறனை வழங்கியதற்காக எமது பல்கலைக்கழக ஊழியர்களை நான் வாழ்த்துவதோடு, எதிர்வரும் ஆண்டுகளிலும் சிறப்பான செயல்திறனை எதிர்பார்க்கிறேன். மேலும் கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கையுடன் தொடர்ச்சியான ஈடுபாடு கொண்டமைக்காக மூதவை, பேரவை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு ஆகியவற்றிற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**பேராசிரியர். T. ஜெயசிங்கம்**
உபவேந்தர்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## 3.2 சிறப்பம்சங்கள் 2016

- தாய்லாந்து ஆசிய தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை ஆகியவற்றிற்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) கையெழுத்திடப்பட்டது. இவ் ஒப்பந்தத்தினூடாக துறைசார் விருத்தி, ஊழியர் பரிமாற்றம், முதுகலை பயிற்சி, கூட்டு ஆராய்ச்சி, கூட்டு மாநாடு, கூட்டு கற்கை நெறிகள் மற்றும் தொழில்நுட்ப பீடத்திற்கான பாடத்திட்டத்தின் வகுப்பாய்வுகள் போன்ற பல்வேறு கூட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்த முயற்சியின் ஒரு பகுதியாக முதுகலைக் கற்கைக் காலத்தில் வெளிநாட்டிற்கான பயிற்சி/அனுபவத்தினைப் பெற்றிராத 26 கல்விசார் ஊழியர்கள் இரு குழுக்களாக (குழு-1: 2016 ஐப்பசி 17ஆம் திகதி முதல் 24 திகதி வரையிலும் மற்றும் குழு-2: 2016 கார்த்திகை 14ஆந் திகதி முதல் 21ஆந் திகதி வரையிலும்) ஆசிய தொழில்நுட்ப நிறுவனத்திற்கான தமது விஜயத்தினை மேற்கொண்டிருந்தனர். சிறந்த நடைமுறைகளின் வெளிப்பாட்டின் மூலம் திறனை அதிகரித்தல், கற்றல் கற்பித்தலில் நவீன போக்குகள், ஆராய்ச்சி நடவடிக்கைகள், நிர்வாகம் மற்றும் மேலாண்மை, தொழில்துறை இணைப்பு மற்றும் மாணவர் ஆலோசனை என்பன இப்பயணத்தின் நோக்கமாகும்.

- அண்ணாமலைப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு, இந்தியா மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை ஆகியவற்றிற்கு இடையே கல்வி மற்றும் தொழில் வளர்ச்சியில் ஒத்துழைப்புடன் செயற்படுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) கையெழுத்திடப்பட்டது. இதில் உள்வாரி மற்றும் முதுகலை கற்கைநெறிகளில் பங்கேற்பதற்காக ஊழியர்கள் மற்றும் மாணவர்களின் பரிமாற்றம், கல்விசார் பீடங்களின் விருத்தி, கல்விசார் பீட உறுப்பினர்களுக்கான குறுகிய காலப் பயிற்சிகள், ஊழியர்கள் அபிவிருத்தி மற்றும் தொழில் வழிகாட்டலில் ஆலோசனை மற்றும் பயிற்சி மற்றும் மாநாடுகள், கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள், முதலியனவற்றில் பங்கேற்றல் என்பன உள்ளடங்குகின்றன.

- பாண்டிச்சேரி பிரஞ்சு நிறுவனம், இந்தியா மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை ஆகியவற்றிற்கு இடையே ஊழியர்களின் வருகை, மாணவர்களின் பரிமாற்றம் மற்றும் அறிவார்ந்த வேலை பரிமாற்றம் ஆகியவற்றை மேம்படுத்துதல் மற்றும் எளிதாக்குதல் என்பவற்றினை ஊக்குவிப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) கையெழுத்திடப்பட்டது.

- தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், தமிழ்நாடு, இந்தியா மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை ஆகியவற்றிற்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) கையெழுத்திடப்பட்டது. இதன் மூலம் ஆய்வுகள், முதுகலை பயிற்சிகள், மாநாடுகள் மற்றும் ஊழியர்கள் மற்றும் மாணவர் பரிமாற்றங்களை ஒருங்கிணைத்தல் ஆகிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

- பாரதியார் பல்கலைக்கழகம், இந்தியா மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை ஆகியவற்றிற்கு இடையே ஆராய்ச்சி ஒத்துழைப்பு, பரிமாற்ற விஜயங்கள் மற்றும் ஊழியர்கள் பயிற்சி ஆகியவற்றை வளர்ப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) கையெழுத்திடப்பட்டது.

- இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களிலே பாலின சமபங்கு மற்றும் சமத்துவத்திற்கான செல்லினை முதலாவதாக நிறுவியது கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை ஆகும். இது 13ஆம் திகதி ஆனி மாதம் 2016ஆம் ஆண்டு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

- புதிய நிறுவன மதிப்பாய்வு கையேடு – 2015ற்கு அமைவாக நிறுவன மதிப்பாய்வினை பூர்த்தி செய்த இலங்கையின் முதலாவது பல்கலைக்கழகம் கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை ஆகும்.

- கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கையின் 4வது சர்வதேச மாநாடு (ICE 2016) ஆனது “ஒருங்கிணைப்பு மூலம் அறிவை வளர்த்தல்” எனும் கருப்பொருளை மையமாகக் கொண்டு 2016ஆம் ஆண்டு பங்குனி மாதம் 10ஆம் மற்றும் 11ஆம் திகதிகளில் நடைபெற்றது.

- விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த நான்கு கல்வியியலாளர்கள் 2014ஆம் ஆண்டில் பிரபல ஆய்வுப் பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட தங்களின் ஆய்வுக் கட்டுரைகளுக்காக ஜனாதிபதி விருதினை 22ஆம் திகதி கார்த்திகை 2016 அன்று நடைபெற்றது வைபவத்தில் பெற்றுக் கொண்டனர்.

- சீனாவில் இடம்பெற்ற ஆசியப் பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான இரண்டாவது கூடைப்பந்து சாம்பியன்ஷிப் - 2016 போட்டியில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்திய இலங்கைக்கான தேசிய பல்கலைக்கழக அணியில் கிழக்குப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இரு மாணவர்கள் இடம்பெற்றிருந்தனர்.

- பொது சுகாதாரத்திற்கான இளங்கலைப்பட்டத்தினை (Bachelor of Public Health (BPH)) கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கையில் அறிமுகம் செய்வதற்காக ஓர் வெளிப்பாட்டு பயணமானது Institute of Medicine, Tribhuvan University, Nepal ற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதற்காக சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடத்தின் பிரதிநிதிகளடங்கிய குழுவொன்று கற்கைநெறியின் பாடத்திட்டம் மற்றும் நடைமுறைகளை ஆய்வு செய்வதற்காக தமது விஜயத்தினை மேற்கொண்டிருந்தது.

- கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கையின் வரலாற்றில் முதன்முறையாக உபவேந்தர் அவர்கள் 9ஆம் திகதி தை மாதம் 2016 அன்று இடம்பெற்ற வண்ணமயமான நிகழ்வில் வைபவரீதியாக பதவியேற்றுக் கொண்டார்.

- Dr. K.E. கருணாகரன் அவர்கள் கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கையின் பிரதி உபவேந்தராக நியமிக்கப்பட்டார்.

- “நிறுவன முடிவுகள் கட்டமைப்பு” (ORF) தொடர்பான பயிற்சிப் பட்டறையானது சித்திரை, 2016 அன்று நடைபெற்றது.

- “மூலோபாயத் திட்டத்தின் மீதான தற்போதைய நிலை மற்றும் எதிர்கால செயற்பாடுகளின் மதிப்பாய்வு” தொடர்பான பயிற்சிப் பட்டறையானது ஆனி மாதம் 2016இல் 10 தொடக்கம் 12ஆம் திகதிகளில் பேரவை உறுப்பினர்கள் மற்றும் கிழக்கு பல்கலைக்கழகத்தின் முக்கிய பணியாளர்களுடன் நடைபெற்றது. இதன்போது ஆளுகை மற்றும் நிர்வாகம், நிறுவன திறன் மீதான தற்போதைய சவால்கள் மற்றும் எதிர்கால தேவைகள் மற்றும் இளங்கலை மற்றும் முதுகலை திட்டங்கள், ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு என்பவற்றின் மீது கவனம் செலுத்தப்பட்டது.

## 3.3 மீள்பார்வை

இலங்கையின் கிழக்குப் பல்கலைக்கழகமானது 2016 ஆம் ஆண்டிற்கான தனது கல்வி சார் நடவடிக்கைகளை ஏழு பீடங்கள் மற்றும் 35 துறைகளின் ஊடாக தொடர்ந்து வழங்கிக் கொண்டு இருந்தது.

***இலங்கையின் கிழக்குப் பல்கலைக்கழகமானது*** 1981ஆம் ஆண்டு ஆவணி மாதம் 1ம் திகதி விஞ்ஞானம் மற்றும் விவசாய பீடங்களுடன் மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரி எனும் பெயரில் பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்ததாக ஆரம்பிக்கப்பட்டது. அது பின்னர் முழு அளவிலான பல்கலைக்கழகமாக 1996ஆம் ஆண்டு மேலதிக பீடங்களான வர்த்தகமுகாமைத்துவ பீடம் மற்றும் கலை கலாசார பீடங்களுடன் தரமுயர்த்தப்பட்டது. இதன் பின்னர் 2006ஆம் ஆண்டு சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடம் ஆரம்பிக்கப்பட்டது.

***கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாகமானது*** தொடர்பாடல் மற்றும் வியாபார கற்கைகள் பீடம் மற்றும் பிரயோக விஞ்ஞான பீடம் ஆகிய இரண்டு பீடங்களுடன் 2001ஆம் ஆண்டு ஆனி மாதம் 15ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. தற்போது இவ் வளாகமானது சித்த வைத்திய அலகையும் உள்ளடக்கி திருகோணமலைக்கு 10 கிலோமீற்றர் வடக்கில் அமைந்துள்ள கோணேசபுரியில் 250 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

***சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகமானது*** 2005ஆம் ஆண்டு பங்குனி மாதம் 1ஆம் திகதி கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது. இவ்வாறு இணைக்கப்படும் வரை சுவாமி விபுலானந்தா இசை நடனக் கல்லூரி எனும் பெயருடன் 1981ஆம் ஆண்டு பிராந்திய விவகாரங்கள் மற்றும் இந்து கலாசார அமைச்சினால் நிறுவப்பட்டு பின்னர் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கி வந்தது.

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கையானது, உள்நாடு மற்றும் வெளிநாட்டிலுள்ள அரசாங்க மற்றும் தனியார் அமைப்புகளின் தேவைகளிற்கு ஏற்றவாறான தகைமைவாய்ந்த பட்டதாரிகளை உருவாக்கும் விதமாக தமது கல்வி நடவடிக்கைகளில் வலுவான கவனம் செலுத்தி வருகின்றது. மேலும் பல்கலைக்கழகத்தில் பன்துறை சார் ஆராய்ச்சிகளை மேம்படுத்துவதோடு பங்குதாரர்கள் மற்றும் சமூகத்தின் தேவைகளிற்கு ஏற்ப செயற்பட்டும் இப்பிராந்தியத்தின் அமைதி மற்றும் ஒற்றுமையில் பெரிதும் பங்களிப்பு செலுத்தியும் வருகிறது.

### a. பீடங்கள் மற்றும் கற்கைநெறிகள்:

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கையானது இளங்கலைமாணி, முதுகலைமாணி, டிப்ளோமா மற்றும் சான்றிதழ் கற்கைநெறிகளை பின்வரும் பீடங்கள் மற்றும் கல்விசார் திணைக்களங்களினூடாக வழங்கிவருகின்றது.

| பீடம் | திணைக்களங்கள் |
|---|---|
| விவசாய பீடம் | விவசாய உயிரியல், விவசாய வேதியியல், விவசாய பொருளாதாரம், விவசாய பொறியியல், விலங்கு அறிவியல் மற்றும் பயிர் அறிவியல் |
| கலை மற்றும் கலாச்சார பீடம் | அரபு, சமய ஒப்பீடு, நுண்கலைகள், புவியியல், இந்து நாகரிகம், வரலாறு, இஸ்லாமிய கற்கைகள், மொழிகள் மற்றும் சமூக அறிவியல் |
| வணிகம் மற்றும் முகாமைத்துவ பீடம் | வர்த்தகம், பொருளாதாரம் மற்றும் முகாமைத்துவம் |
| சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடம் | மருத்துவ அறிவியல், மனித உயிரியல், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி, நோய்க்கூறு உயிரியல், முதன்மை சுகாதாரம் மற்றும் துணை |

| | |
|---|---|
| | சுகாதார அறிவியல். |
| விஞ்ஞான பீடம் | தாவரவியல், இராயனவியல், கணிதம்,<br>பௌதிகவியல் மற்றும் விலங்கியல். |
| ***திருகோணமலை வளாகம்*** | |
| தொடர்பாடல் மற்றும் வியாபார கற்கைகள் பீடம் | வணிக மற்றும் முகாமைத்துவக் கற்கைகள்,<br>மொழிகள் மற்றும் தொடர்பாடல் கற்கைகள் |
| பிரயோக விஞ்ஞான பீடம் | கணணி விஞ்ஞானம்,<br>பௌதிக விஞ்ஞானம். |
| சித்த வைத்திய அலகு | |

- ***விவசாய பீடமானது*** கௌரவ விவசாய விஞ்ஞான இளமானி பட்டத்தினையும் விவசாய விஞ்ஞான முதுமானி பட்டத்தினையும் வழங்குகிறது

- ***கலை மற்றும் கலாச்சார பீடமானது*** பொது கலை இளமானி பட்டம், சமய ஒப்பீடு, நாடகம் மற்றும் அரங்கியல், பொருளாதாரம், நுண்கலை, புவியியல், இந்து நாகரிகம், வரலாறு, தத்துவவியல், அரசியல் அறிவியல், சமூகவியல் மற்றும் தமிழ் என்பனவற்றில் கௌரவ கலை இளமானி பட்டம், கொளவ கல்வியியல்மானி பட்டம், கலை முதுமானி, கல்வியியல் முதுமானி, முதுதத்துவமானி மற்றும் கலாநிதி ஆகிய பட்டங்களினையும் வழங்குகிறது

- ***வணிக மற்றும் முகாமைத்துவ பீடமானது*** கௌரவ வர்த்தக இளமானி பட்டம், கணக்கியல் மற்றும் நிதியியல், நிறுவன மேம்பாடு, வணிக பொருளாதாரம் என்பவற்றில் கௌரவ வர்த்தக இளமானி பட்டம் ; கௌரவ வணிக முகாமைத்து இளமானி பட்டம், மனிதவள முகாமைத்துவம், சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் என்பவற்றில் கௌரவ வணிக முகாமைத்துவ இளமானி பட்டம்; முகாமைத்துவ பட்டப் பின்படிப்புக் கற்கை; வணிக முகாமைத்துவ முதுமானி பட்டம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி முதுமானி பட்டம் ஆகியவற்றை வழங்குகிறது.

- ***சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடமானது*** மருத்துவ இளமானி மற்றும் சத்திர சிகிச்சை இளமானி பட்டம் மற்றும் தாதியியலில் விஞ்ஞான இளமானி பட்டம் என்பவற்றை வழங்குகிறது.

- ***விஞ்ஞான பீடமானது*** பொது விஞ்ஞான இளமானி பட்டம், தாவரவியல், இரசாயனவியல், கணனி விஞ்ஞானம், கணிதம், பௌதிகவியல் மற்றும் விலங்கியல் என்பவற்றில் கௌரவ விஞ்ஞான இளமானி பட்டம், விஞ்ஞானக் கல்வியியலில் விஞ்ஞான முதுமானி பட்டம், முதுதத்துவமானி பட்டம் மற்றும் கலாநிதி ஆய்வுப் பட்டம் ஆகியவற்றை வழங்குகிறது.

- ***திருகோணமலை வளாகமானது தொடர்பாடல் மற்றும் வியாபாரக் கற்கைகள் பீடம், பிரயோக விஞ்ஞான பீடம் மற்றும் சித்தவைத்திய அலகினை*** கொண்டுள்ளதோடு இவற்றினூடாக முகாமைத்துவத்தில் பொது விஞ்ஞான இளமானி பட்டம்; முகாமைத்துவம், சந்தைப்படுத்தல்-முகாமைத்துவம், மனிதவள-முகாமைத்துவம், கணக்கியல் மற்றும் நிதி-முகாமைத்துவம் மேலும் தகவல்-முகாமைத்துவம் என்பவற்றில் கௌரவ விஞ்ஞான இளமானி பட்டம்; மொழிகள் மற்றும் தொடர்பாடல் என்பவற்றில் கௌரவ கலை இளமானி


பட்டம் பிரயோக விஞ்ஞானம் மற்றும் இலத்திரனியல், கணனிவிஞ்ஞானம் என்பவற்றில் விஞ்ஞான இளமானி பட்டம் மேலும் சித்தமருத்துவம் மற்றும் அறுவைசிகிச்சையில் இளமானி பட்டத்தையும் வழங்குகிறது.

- ***வெளிவாரிப் பட்டம் மற்றும் விரிவாக்கல் பயிற்சி மையம்:*** பல்கலைக்கழக கல்வியைப் பெறுவதற்கு அதிக மாணவர்களுக்கு வாய்ப்பளிக்கும் நோக்குடன் வெளிவாரிப் பட்ட படிப்புகளை எமது பீடங்கள் வழங்கிவருகின்றன. இவ்வாறான பட்டப் படிப்புகள் வெளிவாரிப் பட்டம் மற்றும் விரிவாக்கல் பயிற்சி மையத்தினூடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவையாவன, பொது கலை இளமானி பட்டம், வணிக நிர்வாக இளமானி பட்டம், விவசாய விஞ்ஞான இளமானி பட்டம், பொது விஞ்ஞான இளமானி பட்டம் மற்றும் தாதியியலில் விஞ்ஞான இளமானி பட்டம் என்பவும் திருகோணமலை வளாகத்தினூடாக முகாமைத்துவத்தில் விஞ்ஞான இளமானி பட்டம் மற்றும் தொடர்பாடலில் கலை இளமானி பட்டம் என்பனவுமாகும்.

### b. புதிய பீடம் மற்றும் கற்கைநெறி

தொழில்நுட்ப திறனுடைய பட்டதாரிகளை உருவாக்கும் கொள்கையுடன் "எரிசக்தி மற்றும் சுற்றுச்சூழல்'', "தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்'', "உயிரி அமைப்பு தொழில்நுட்பம்'' மற்றும் "பல்லொழுக்காற்றுகை கற்கைகள்'' உள்ளிட்ட நான்கு கல்விசார் துறைகளுடன் கூடிய தொழில்நுட்ப பீடத்தினை நிறுவும் பணியினை எமது பல்கலைக்கழகமானது முன்னெடுத்து வருகிறது. இதில் "உயிரி அமைப்பு தொழில்நுட்பம்'' மற்றும் "பல்லொழுக்காற்றுகை கற்கைகள்'' துறைகளினை ஆரம்பிப்பதற்கான அனுமதி பெறப்பட்டுள்ளதோடு உயிரி அமைப்பு தொழில்நுட்பம் (விவசாய தொழில்நுட்பம் மற்றும் தொழில் முனைவுதிறன்) இல் விஞ்ஞான இளமானி பட்டம் அங்கீகரிக்கப்பட்டு ஆரம்பிக்கப்படவுள்ளது. ''தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப இளங்கலைப் பட்டம்" மற்றும் ''பொறியியல் தொழில்நுட்பம் (எரிசக்தி மற்றும் சுற்றுச்சூழல்) இளங்கலைப் பட்டம்" எனும் இரு கற்கைநெறிகளுக்கான முன்மொழிவுகள் செய்யப்படுவதற்கான ஆரம்ப நிலையிலுள்ளது.

## c. பல்கலைக்கழகத்தின் நிறுவனக் கட்டமைப்பு




படம் 1: கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கையின் நிறுவனக்கட்டமைப்பு

## d. பேரவை

### பேரவை உறுப்பினர்கள்

| | |
|---|---|
| பேராசிரியை. உமா குமாரசுவாமி | தகுதிவாய்ந்த அதிகாரி - தலைவர் (தை 2016 வரை) |
| பேராசிரியர். ரீ. ஜெயசிங்கம் | உபவேந்தர் - தலைவர் (தை 2016 இல் இருந்து) |
| கலாநிதி. கே.ஈ. கருணாகரன் | பிரதி உபவேந்தர் (சித்திரை 2016 இல் இருந்து) |
| கலாநிதி. வி. கனகசிங்கம் | வளாகத் தலைவர், திருகோணமலை வளாகம் |
| கலாநிதி. ரி. சுந்தரேசன் | பீடாதிபதி/ சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானம் (தை 2016 வரை) |
| கலாநிதி. ஏ.என். அருள்பிரகாசம் | பதில் பீடாதிபதி/ சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானம் (மாசி – புரட்டாசி 2016 வரை) & பீடாதிபதி/ சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானம் (புரட்டாசி 2016 இல் இருந்து) |
| கலாநிதி. கே. இராஜேந்திரம் | பீடாதிபதி/ கலை மற்றும் கலாச்சாரம் (கார்த்திகை 2016 வரை) |
| திரு. எம். ரவி | பீடாதிபதி/ கலை மற்றும் கலாச்சாரம் (மார்கழி 2016 இல் இருந்து) |
| திரு. ஆர். உதயகுமார் | பீடாதிபதி/ வணிக மற்றும் முகாமைத்துவ பீடம் |
| கலாநிதி. எப்.சி. றாகல் | பீடாதிபதி/ விஞ்ஞானம் (தை 2016 வரை) |
| கலாநிதி.(திருமதி).எம். வினோபாபா | பீடாதிபதி/ விஞ்ஞானம் (மாசி 2016 இல் இருந்து) |
| கலாநிதி. பி. சிவராஜா | பீடாதிபதி/ விவசாயம் |
| திரு. ரி. பாஸ்கர் | பீடாதிபதி/ தொடர்பாடல் மற்றும் வியாபாரக் கற்கைகள் திருகோணமலை வளாகம் (ஐப்பசி 2016 வரை) |
| திருமதி. கே. சாந்தகுமார் | பதில் பீடாதிபதி/ தொடர்பாடல் மற்றும் வியாபாரக் கற்கைகள் திருகோணமலை வளாகம் (மார்கழி 2016 இல் இருந்து) |
| கலாநிதி. என். பிரதீஷ் | பீடாதிபதி/பிரயோக விஞ்ஞானம் திருகோணமலை வளாகம் |
| கலாநிதி. கே.ஈ. கருணாகரன் | மூதவையினால் நியமிக்கப்பட்டவர் (மாசி – பங்குனி 2016 வரை) |
| திரு. பி. சச்சிதானந்தம் | மூதவையினால் நியமிக்கப்பட்டவர் (சித்திரை 2016 வரை) |
| திரு. எம். ரவி | மூதவையினால் நியமிக்கப்பட்டவர் (ஆவணி – ஐப்பசி 2016 வரை) |
| திரு. ரி. சதானந்தன் | மூதவையினால் நியமிக்கப்பட்டவர் (ஆடி 2016 இல் இருந்து) |

### பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்

திருமதி. பி.எஸ்.எம். சார்லஸ்
Rev. Fr. பால் றெபின்சன்
திரு. ஏ. ஞானதாசன்
பேராசிரியர். ஆர். சிவகணேசன்
கலாநிதி. எம்.எஸ். இப்ராலெப்பே
கலாநிதி. எச்.ஆர். தம்பவிட்ட
திரு. பி.ரி.ஏ. ஹசன்
கலாநிதி. எஸ். மௌனகுரு
கலாநிதி. எஸ்.எம். குசைன்
கலாநிதி. என். தமிழ்வாணன்
திரு. ஆர். கண்ணன்

### மூதவையினால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள்

கலாநிதி. எம். பக்திநாதன்
பேராசிரியர். எஸ். திருக்கணேஷ்

### பேரவை செயலாளர்

திரு. வி. காண்டீபன், பதிவாளர், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## e. மூதவை

### மூதவை உறுப்பினர்கள்

| | |
|---|---|
| பேராசிரியை. உமா குமாரசுவாமி | தகுதிவாய்ந்த அதிகாரி - தலைவர் (தை 2016 வரை) |
| பேராசிரியர். ரீ. ஜெயசிங்கம் | உபவேந்தர் - தலைவர் (தை 2016 இல் இருந்து) |
| கலாநிதி. கே.ஈ. கருணாகரன் | பிரதி உபவேந்தர் (சித்திரை 2016 இல் இருந்து) |
| கலாநிதி. வி. கனகசிங்கம் | முதல்வர், திருகோணமலை வளாகம் |
| கலாநிதி. எஸ். ஜெயசங்கர் | இயக்குனர்/சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் |
| கலாநிதி. பி. சிவராஜா | பீடாதிபதி/விவசாயம் |
| கலாநிதி. கே. இராஜேந்திரம் | பீடாதிபதி/ கலை மற்றும் கலாச்சாரம் (கார்த்திகை 2016 வரை) |
| திரு. எம். ரவி | பீடாதிபதி/கலை மற்றும் கலாச்சாரம் (மார்கழி 2016 இல் இருந்து) |
| கலாநிதி. எப்.சி. றாகல் | பீடாதிபதி/விஞ்ஞானம் (தை 2016 வரை) |
| கலாநிதி. (திருமதி). எம். வினோபாபா | பீடாதிபதி/விஞ்ஞானம் (மாசி 2016 இல் இருந்து) |
| கலாநிதி. கே.ரி. சுந்தரேசன் | பீடாதிபதி/சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானம் (தை 2016 வரை) |
| கலாநிதி. ஏ.என். அருள்பிரகாசம் | பதில் பீடாதிபதி/ சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானம் (மாசி – புரட்டாசி 2016 வரை) & பீடாதிபதி (புரட்டாசி 2016 இல் இருந்து) |
| திரு. ஆர். உதயகுமார் | பீடாதிபதி/வணிக மற்றும் முகாமைத்துவ பீடம் |
| திரு. ரி. பாஸ்கர் | பீடாதிபதி/தொடர்பாடல் மற்றும் வியாபாரக் கற்கைகள் திருகோணமலை வளாகம் (ஐப்பசி 2016 வரை) |
| கலாநிதி. என். பிரதீஸ் | பீடாதிபதி/பிரயோக விஞ்ஞானம் திருகோணமலை வளாகம் |
| பேராசிரியை. ஏ. முருகதாஸ் | தமிழ் பேராசிரியர் |
| பேராசிரியை. (திருமதி). ரி. மகேந்திரன் | விவசாய இரசாயனவியல் பேராசிரியர் |
| பேராசிரியர். பி. வினோபாபா | விலங்கியல் பேராசிரியர்/துறைத் தலைவர்/விலங்கியல் |
| பேராசிரியர். வி. குணரெட்னம் | அரசியல் விஞ்ஞானப் பேராசிரியர் (சித்திரை 2016 இல் இருந்து) |
| திருமதி. ரி. அருளானந்தி | நூலகர் |
| கலாநிதி.(திருமதி).என்.ரொட்னி பெனான்டோ | துறைத் தலைவர்/விவசாய உயிரியல் |
| கலாநிதி. எம். பக்திநாதன் | துறைத் தலைவர்/விலங்கு விஞ்ஞானம் (ஆனி 2016 வரை) |
| திரு. எம்.எஸ்.எம். நபீஸ் | துறைத் தலைவர்/ விலங்கு விஞ்ஞானம் (ஆடி 2016 இல் இருந்து) |
| கலாநிதி. (திருமதி). பி. பிரேமானந்தராஜா | துறைத் தலைவர்/ விவசாய இரசாயனவியல் |
| திரு. எஸ். ஸ்ரீகிருஸ்ணா | துறைத் தலைவர்/ பயிர் விஞ்ஞானம் |
| திருமதி. ரி. கிரிதரன் | துறைத் தலைவர்/ விவசாயப் பொருளாதாரம் (புரட்டாசி 2016 வரை) |
| திருமதி. ரி. கிருபானந்தன் | துறைத் தலைவர்/ விவசாயப் பொருளாதாரம் (புரட்டாசி 2016 இல் இருந்து) |
| திரு. ஆர். திவ்வியதர்சன் | துறைத் தலைவர்/ விவசாயப் பொறியியல் (பங்குனி 2016 வரை) |
| திருமதி. ஆர். பவதாரனி | துறைத் தலைவர்/ விவசாயப் பொறியியல் (சித்திரை 2016 இல் இருந்து) |
| கலாநிதி. எம். வர்ணகுலசிங்கம் | துறைத் தலைவர்/ புவியியல் |
| கலாநிதி. வி. இன்பமோகன் | பதில் துறைத் தலைவர்/ நுண்கலை |
| கலாநிதி. பி.எம். ஹம்துன் | துறைத் தலைவர்/ அரபிக் |
| திரு. பி. சச்சிதானந்தம் | துறைத் தலைவர்/ மத ஒப்பீடு & சமூக நல்லிணக்கம் (ஆடி 2016 வரை) |

| | |
|---|---|
| திரு. ஆர். சகாயசீலன் | பதில் துறைத் தலைவர்/ மத ஒப்பீடு & சமூக நல்லிணக்கம் (ஆவணி – புரட்டாசி 2016 வரை) & துறைத் தலைவர்/ மத ஒப்பீடு & சமூக நல்லிணக்கம் (புரட்டாசி 2016 இல் இருந்து) |
| திருமதி. ஆர்.வி. பிரான்சிஸ் | துறைத் தலைவர்/ மொழிகள் & பதில் துறைத் தலைவர்/ ஆங்கில மொழி கற்பித்தல் அலகு |
| திரு. எம். ரவி | துறைத் தலைவர்/ சமூக விஞ்ஞானம் (கார்த்திகை 2016 வரை) |
| கலாநிதி. ஜி. தில்லைநாதன் | துறைத் தலைவர்/ சமூக விஞ்ஞானம் (மார்கழி 2016 இல் இருந்து) |
| திரு. எம்.ரி.எம். றிஸ்வி | துறைத் தலைவர்/ இஸ்லாமிய கற்கைகள் |
| திருமதி. எஸ். கேசவன் | துறைத் தலைவர்/ இந்து நாகரிகம் |
| கலாநிதி. சி. அருள்மொழி | துறைத் தலைவர்/ கல்வி மற்றும் குழந்தைகள் பராமரிப்பு |
| திரு. எஸ்.கே. சிவகணேசன் | துறைத் தலைவர்/ வரலாறு |
| திருமதி. எஸ். மகேஸ்வரநாதன் | துறைத் தலைவர்/ பொருளாதாரம் |
| திருமதி. எஸ். ஸ்ரீதரன் | துறைத் தலைவர்/ வர்த்தகம் |
| திருமதி. ஆர்.வி. ராகல் | துறைத் தலைவர்/ முகாமைத்துவம் |
| கலாநிதி. பி. பிரதீபன் | துறைத் தலைவர்/ பௌதிகவியல் |
| கலாநிதி. எம். சிதம்பரேசன் | துறைத் தலைவர்/ இரசாயனவியல் |
| திருமதி. எஸ். சதானந்தன் | துறைத் தலைவர்/ கணிதம் |
| திருமதி. யூ. மதிவேந்தன் | துறைத் தலைவர்/ தாவரவியல் |
| திருமதி. நிருபா. எஸ். ஜெயசுந்தர | துறைத் தலைவர்/ மொழிகள் மற்றும் தொடர்பாடல் கற்கைகள், திருகோணமலை வளாகம் (ஆனி 2016 வரை) |
| கலாநிதி. வி.ஜே. நவீன்ராஜ் | துறைத் தலைவர்/ மொழிகள் மற்றும் தொடர்பாடல் கற்கைகள், திருகோணமலை வளாகம் (கார்த்திகை 2016 இல் இருந்து) |
| திருமதி. கே. சந்திரகுமார் | துறைத் தலைவர்/ வணிகம் மற்றும் சந்தைப்படுத்தல் கற்கைகள், திருகோணமலை வளாகம் |
| திரு. எஸ். தட்சணாமூர்த்தி | பதில் துறைத் தலைவர்/ கணணி விஞ்ஞானம் (மாசி 2016 வரை) & துறைத் தலைவர்/ கணணி விஞ்ஞானம் (பங்குனி 2016 இல் இருந்து) |
| திரு. எஸ். லோகீஸ்வரன் | துறைத் தலைவர்/ பிரயோக விஞ்ஞானம், திருகோணமலை வளாகம் |
| கலாநிதி.Rev. Sr. ஜொசெபா ஜோசப் | துறைத் தலைவர்/ துணை சுகாதார அறிவியல் |
| கலாநிதி. கே.ஈ. கருணாகரன் | துறைத் தலைவர்/ மருத்துவ அறிவியல் (தை 2016 வரை) |
| கலாநிதி. (திருமதி) ஏ.என். அருள்பிரகாசம் | துறைத் தலைவர்/ மருத்துவ அறிவியல் (மாசி – பங்குனி 2016 வரை) |
| கலாநிதி. எம். திருக்குமார் | பதில் துறைத் தலைவர்/ மருத்துவ அறிவியல் (கார்த்திகை 2016 இல் இருந்து) |
| கலாநிதி.(திருமதி).ஏ.என்.அருள்பிரகாசம் | துறைத் தலைவர்/ நோய்க்கூறு உயிரியல் (தை 2016 வரை) |
| கலாநிதி. எம். திருக்குமார் | பதில் துறைத் தலைவர்/ நோய்க்கூறு உயிரியல் (மாசி – ஐப்பசி 2016 வரை) |
| கலாநிதி. எம். திருக்குமார் | பதில் துறைத் தலைவர்/ மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி (மாசி 2016 வரை) |
| திரு. ரி. சதானந்தன் | துறைத் தலைவர்/ மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி (பங்குனி 2016 இல் இருந்து) |
| கலாநிதி. (திருமதி) எம். தயாபரன் | துறைத் தலைவர்/ மனித உயிரியல் |
| கலாநிதி. (திருமதி). ஜே மகிந்தன் | துறைத் தலைவர்/ முதன்மை சுகாதாரம் |
| கலாநிதி. எம்.எம். மகுசூன் | பிரதிநிதி/விவசாய பீடம் |
| திருமதி. கே. திருமாபன் | பிரதிநிதி/விவசாய பீடம் |
| கலாநிதி. ஏ. அன்ரன் அருள்ராஜ் | பிரதிநிதி/வணிகம் மற்றும் முகாமைத்துவ பீடம் |

| | |
|---|---|
| கலாநிதி. என். இராஜேஸ்வரன் | பிரதிநிதி/வணிகம் மற்றும் முகாமைத்துவ பீடம் |
| திரு. பி. பரமதேவன் | பிரதிநிதி/விஞ்ஞான பீடம் (மாசி 2016 இல் இருந்து) |
| கலாநிதி. (திருமதி). சி. மகேந்திரநாதன் | பிரதிநிதி/ விஞ்ஞான பீடம் (மாசி 2016 வரை) |
| கலாநிதி. ரி. மதிவேந்தன் | பிரதிநிதி/விஞ்ஞான பீடம் (மாசி 2016 இல் இருந்து) |
| திரு. ஏ.ஜே. குசைன் | பிரதிநிதி/கலை மற்றும் கலாச்சார பீடம் |
| கலாநிதி. ஜே. கெனடி | பிரதிநிதி/கலை மற்றும் கலாச்சார பீடம் (ஆடி 2016 வரை) |
| திரு. ஆர். கிருபராஜா | பிரதிநிதி/கலை மற்றும் கலாச்சார பீடம் (ஐப்பசி 2016 இல் இருந்து) |
| திரு. ரி. சதானந்தன் | பிரதிநிதி/சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானம் (மாசி 2016 வரை) |
| கலாநிதி. ஜே. ஜெயரூபன் | பிரதிநிதி/சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானம் (மாசி 2016 இல் இருந்து) |
| கலாநிதி. கே.ஈ. கருணாகரன் | பிரதிநிதி/சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானம் (மாசி – வைகாசி 2016) |
| கலாநிதி. கே. கார்த்தீபன் | பிரதிநிதி/சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானம் (ஆனி 2016 இல் இருந்து) |

## மூதவை செயலாளர்

திரு. வி. காண்டீபன், பதிவாளர், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## 3.4 தோல்வி மற்றும் நியாயம்

a. ஊழியர்களின் ஊக்கம் இன்னும் குறைவாகவே உள்ளது, இது மோதல் காலத்தில் ஏற்பட்ட அனுபவங்களின் விளைவாக இருக்கலாம். பலர் பல்வேறு காரணங்களுக்காக, கல்வி/ நிர்வாகம் தொடர்பான தங்கள் பணிகளில் மட்டுமே தமது சேவையினை வழங்கினர்.

b. பல்கலைக்கழகத்தில் பகிடிவதையினை முற்றுமுழுதாக இல்லாதொழிப்பதே எமது ஆசை மற்றும் நோக்கமாகும் ஆனால் இதற்கு எதிராக குரல்கொடுக்க முன்வராத பலரால் இதுவும் செயற்படுத்த கடினமாகவுள்ளது. முதலாம் வருட மாணவர்கள் தொடக்கம் ஊழியர்கள் வரை, பகிடிவதையை தடுப்பதென்பது நிர்வாகம் சார் சிக்கலெனக் கருதுகிறார்கள். நாம் இந்த அச்சுறுத்தலுக்கு எதிராக போராடுவதன் நேர்மறை விளைவாக பல்கலைக்கழகத்தின் கல்வி சார் நடவடிக்கையில் ஒரு மிகப்பெரிய முன்னேற்றத்தைப் பெற முடியும்.

c. ஊழியர்கள் மற்றம் வசதிகளின் வரையறைகள் என்பனவும் தடையாகவுள்ளது. இது ஆண்டுக்கான நடவடிக்கைகளில் பின்னடைவை ஏற்படுத்துகிறது. மேலும் எமது கோரிக்கைகள் மற்றும் தேவையான வளங்கள் என்பன மிதமானதாகக் கருதப்படுகிறது. இதனை ஏற்றுக் கொள்வதற்கும் கடந்து செல்வதற்குமான ஒவ்வொரு நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

## 3.5 எதிர்காலத் திட்டம்

a. பல்கலைக்கழகத்தில் பகிடிவதையை இல்லாதொழித்தல் மற்றும் பாலின சமத்துவம் மற்றும் சமபங்கினை ஏற்படுத்துதல் என்பன எமது முக்கிய கருப்பொருளாகக் கருதப்படுகிறது. GEE செல்லிற்கான யுனெஸ்கோவின் பங்களிப்பானது இதை உறுதிப்படுத்துகிறது.

b. இலங்கைக்கு அப்பாலுள்ள பல்கலைக்கழகங்களில் நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்வதன் மூலம் ஊழியர்களின் திறனை வளர்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இச்செயற்றிட்டம் பயனளிக்கத் தொடங்கியுள்ளது. ஊக்குவிப்புத் திட்டங்கள், திறமையாகச் செயற்படும் ஊழியர்கள் மற்றும் மாணவர்களுக்கான வெகுமதிகளை வழங்கல் என்பன எதிர்காலத்தில் ஒரு முக்கியமாக பங்குவகிக்கும்.

c. பல்கலைக்கழக நகரமயமாக்கல் திட்டத்தினை சமூக அபிவிருத்தியுடன் இணைந்து அபிவிருத்தி செய்வதற்கான திட்ட முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது எங்களுக்கும் மக்களுக்குமான நெருக்கத்தை ஏற்படுத்துவதோடு, சமூக மேம்பாட்டிற்கான வேலைத்திட்டமாகவும் அமையும்.

d. சமாதான கற்கைகள், கடல் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், சுற்றுலா மற்றும் விருந்தோம்பல், சட்டம் மற்றும் பால் அறிவியல் ஆகிய கற்கை நெறிகளை ஆரம்பிப்பது தொடர்பில் பரிந்துரைக்கப்படவுள்ளது.

e. கற்கைநெறியுடன் கூடிய வேலைவாய்ப்பானது அனைத்துப் பீடங்களைச் சேர்ந்த சகல உள்வாரிப் பட்டப்படிப்புகளுடனும் இணைக்கப்படும்.

## 4. வளங்கள் மற்றும் மாணவர் விபரம்:

**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை**

| பீடம் | கற்கைநெறி | மொத்த மாணவர் தொகை | மொத்த கல்விசார் ஊழியர் தொகை | மொத்த கல்விசாரா ஊழியர் தொகை |
|---|---|---|---|---|
| கலை மற்றும் கலாசாரம் | கலை இளமானி | 1462 | 56 | 19 |
| விவசாயம் | விவசாய விஞ்ஞான இளமானி | 271 | 32 | 34 |
| வர்த்தகம் மற்றும் முகாமைத்துவம் | வணிக முகாமைத்துவ இளமானி | 452 | 23 | 10 |
| | வர்த்தக இளமானி | 384 | | |
| சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் | மருத்துவ இளமானி மற்றும் சத்திரசிகிச்சை இளமானி, தாதியியல் விஞ்ஞான இளமானி | 380 | 31 | 37 |
| | தாதியல் இளமானி | 81 | | |
| விஞ்ஞானம் | விஞ்ஞான இளமானி (உயிரியல்) | 229 | 32 | 32 |
| | விஞ்ஞான இளமானி (பௌதீகவியல்) | 256 | | |
| நூலகம் | | - | 07 | 13 |
| ஏனைய துறைகள் | | - | - | 204 |
| **மொத்தம்** | | **3515** | **181** | **349** |


**திருகோணமலை வளாகம்**

| பீடம் | கற்கைநெறி | மொத்த மாணவர் தொகை | மொத்த கல்விசார் ஊழியர் தொகை | மொத்த கல்விசாரா ஊழியர் தொகை |
|---|---|---|---|---|
| தொடர்பாடல் மற்றும் வர்த்தகக் கற்கைகள் | விஞ்ஞான இளமானி (முகாமைத்துவம்) | 314 | 11 | 02 |
| | விஞ்ஞான இளமானி (தொடர்பாடல் கற்கைகள்) | 183 | 05 | 02 |
| | கலை இளமானி (மொழிகள்) | | 02 | |
| | கலை இளமானி (மொழியியல்) | - | 01 | |
| பிரயோக விஞ்ஞானம் | கணனி விஞ்ஞான இளமானி | 21 | 07 | 03 |
| | விஞ்ஞான இளமானி (பிரயோக விஞ்ஞான மற்றும் இலத்திரனியல்) | 44 | 04 | |
| சித்த வைத்திய அலகு | சித்த மருத்துவம் மற்றும் சத்திர சிகிச்சை இளமானி | 154 | 09 | 03 |
| நூலகம் | | | 01 | 05 |
| ஏனைய துறைகள் | | | - | 42 |
| **மொத்தம்** | | **716** | **40** | **57** |


## 4.1 மாணவர் பரம்பல்

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை மற்றும் திருகோணமலை வளாகம் என்பவற்றிலுள்ள பீடங்கள் வாரியான மாணவர்களின் விகிதாசாரப் பரம்பலினை கீழ் வரும் படம் 2. காட்டுகிறது.

**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை**




**திருகோணமலை வளாகம்**




***படம் 2: மாணவர் தொகையின் விகிதாசாரப் பரம்பல்***

### உள்நாட்டு மாணவர்கள் :

| **கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை** | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பீடம் | கற்கைநெறி | மொழி மூலம் | 2016ல் உள் வாங்கல் | 1ம் வருட மாணவர் எண்ணிக்கை | 2ம் வருட மாணவர் எண்ணிக்கை | 3ம் வருட மாணவர் எண்ணிக்கை | 4ம் வருட மாணவர் எண்ணிக்கை | 5ம் வருட மாணவர் எண்ணிக்கை | பட்டதாரிகள் எண்ணிக்கை |
| கலை மற்றும் கலாசாரம் | கலை இளமானி | தமிழ் | 400 | 400 | 517 | 545 | - | - | 87 |
| விவசாயம் | விவசாய விஞ்ஞான இளமானி | ஆங்கிலம் | 126 | 84 | 75 | 112 | - | - | 80 |
| வர்த்தகம் மற்றும் முகாமைத்துவம் | வணிக முகாமைத்துவ இளமானி | ஆங்கிலம் | 97 | 95 | 95 | 176 | 86 | - | 61 |
| | வர்த்தக இளமானி | ஆங்கிலம் | 100 | 88 | 77 | 134 | 85 | - | 51 |
| சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் | மருத்துவ இளமானி மற்றும் சத்திரசிகிச்சை இளமானி | ஆங்கிலம் | 131 | 59 (1ம்வருடம்) 71 (புதுமுகம்) | 66 | 58 | 75 | 51 | 58 |
| | தாதியல் இளமானி | ஆங்கிலம் | 31 | 29 | 14 | 16 | 22 | - | 26 |
| விஞ்ஞானம் | விஞ்ஞான இளமானி (உயிரியல்) | ஆங்கிலம் | 108 | 58 | 107 | 64 | - | - | 111 |
| | விஞ்ஞான இளமானி (பௌதீகவியல்) | ஆங்கிலம் | 121 | 77 | 124 | 55 | - | - | |
| **மொத்தம்** | | | **1114** | **961** | **1075** | **1160** | **268** | **51** | **474** |


| திருகோணமலை வளாகம் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பீடம் | கற்கைநெறி | மொழி மூலம் | 2016ல் உள் வாங்கல் | 1ம் வருட மாணவர் எண்ணிக்கை | 2ம் வருட மாணவர் எண்ணிக்கை | 3ம் வருட மாணவர் எண்ணிக்கை | 4ம் வருட மாணவர் எண்ணிக்கை | 5ம் வருட மாணவர் எண்ணிக்கை | பட்டதாரிகள் எண்ணிக்கை |
| பிரயோக விஞ்ஞானம் | கணனி விஞ்ஞான இளமானி | ஆங்கிலம் | 14 | 14 | 7 | - | - | - | - |
| | விஞ்ஞான இளமானி (பிரயோக விஞ்ஞான மற்றும் இலத்திரனியல்) | ஆங்கிலம் | 22 | 22 | 22 | - | - | - | - |
| தொடர்பாடல் மற்றும் வர்த்தகக் கற்கைகள் | விஞ்ஞான இளமானி (முகாமைத்துவம்) | ஆங்கிலம் | 86 | 77 | 79 | 66 | 92 | - | 32 |
| | விஞ்ஞான இளமானி (தொடர்பாடல் கற்கைகள்) | ஆங்கிலம் | 93 | 74 | 24 | 17 | 8 | - | 17 |
| | கலை இளமானி (மொழிகள்) | ஆங்கிலம | - | - | 39 | 21 | - | | 11 |
| சித்த வைத்திய அலகு | சித்த மருத்துவம் மற்றும் சத்திர சிகிச்சை இளமானி | ஆங்கிலம் | 50 | 43 | 49 | 22 | 25 | 15 | 16 |
| **மொத்தம்** | | | **265** | **230** | **220** | **126** | **125** | **15** | **76** |

## வெளிநாட்டு மாணவர்கள்:

| பீடம் | கற்கைநெறி | மொழி மூலம் | 2016ல் உள் வாங்கல் | 1ம் வருட மாணவர் எண்ணிக்கை | 2ம் வருட மாணவர் எண்ணிக்கை | 3ம் வருட மாணவர் எண்ணிக்கை | 4ம் வருட மாணவர் எண்ணிக்கை | 5ம் வருட மாணவர் எண்ணிக்கை | பட்டதாரிகள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வர்த்தகம் மற்றும் முகாமைத்துவம் | வணிக முகாமைத்துவ இளமானி | ஆங்கிலம் | - | - | 1 | - | - | - | - |
| | வர்த்தக இளமானி | ஆங்கிலம் | - | - | 1 | - | - | - | - |
| சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் | மருத்துவ இளமானி மற்றும் சத்திரசிகிச்சை இளமானி | ஆங்கிலம் | - | 4 | 3 | - | - | - | - |
| **மொத்தம்** | | | - | **4** | **5** | - | - | - | - |

## 4.2 ஊழியர்களின் வளங்கள்

எமது பல்கலைக்கழகமானது 35.25% கல்விசார் ஊழியர்கள், 4.47% உதவி கல்விசார் ஊழியர்கள், 2.55% நிர்வாக ஊழியர்கள் மற்றும் 57.74% கல்விசாரா ஊழியர்கள் அடங்கலாக மொத்தம் 627 நிரந்தர ஊழியர்களின் உதவியுடன் தனது இலக்கினை நோக்கிப் பயணிக்கின்றது.




*படம் 3: ஊழியர்களின் விகிதாசாரப் பரம்பல் – 2016*


**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை**

| ஊழியர் பிரிவு | சம்பள அளவீடு | அனுமதிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | பூர்த்தி செய்யப்பட்டுள்ள ஊழியர் எண்ணிக்கை | | | ஊழியர் வெற்றிடம் |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆண் | பெண் | மொத்தம் | |
| கல்விசார் ஊழியர்கள் | U-AC 3 to U-AC 5 | 237 | 112 | 62 | 174 | 63 |
| | U-AC 1 to U-AC 2 | 62 | 19 | 60 | 79 | -17 |
| நூலகம் (கல்விசார் ஊழியர்கள்) | U-AC 5 | 1 | - | 1 | 1 | 0 |
| | U-AC 4 | - | - | - | - | - |
| | U-AC 3 | 6 | 4 | 2 | 6 | 0 |
| நிர்வாக ஊழியர்கள் | U-EX 3 | 2 | 1 | - | 1 | 1 |
| | U-EX 2 | 11 | 3 | 2 | 5 | 6 |
| | U-EX 1 | 14 | 12 | 2 | 14 | 0 |
| பிற நிர்வாக ஊழியர்கள் | U-EX 3 | - | - | - | - | - |
| | U-EX 2 | - | - | - | - | - |
| | U-EX 1 | - | - | - | - | - |
| | U-MO 2 | - | - | - | - | - |
| | U-MO 1 | 1 | 1 | - | 1 | 0 |
| உதவி கல்விசார் ஊழியர்கள் | U-AS 2 | 8 | 5 | 3 | 8 | 0 |
| | U-AS 1 | 8 | 4 | 1 | 5 | 3 |
| தொழிநுட்ப ஊழியர்கள் | U-MT 1 | 86 | 13 | 2 | 15 | 71 |
| | U-MN 4 | 7 | 8 | 1 | 9 | -2 |
| | U-MN 3 | 3 | - | - | 0 | 3 |
| | U-MN 2 | - | - | - | - | - |
| | U-MN 1 | - | - | - | - | - |
| | U-EX 2 | - | - | - | - | - |
| | U-EX 1 | 3 | 1 | 1 | 2 | 1 |
| எழுதுவினைஞர்கள் | U-MN 4 | 12 | 6 | 13 | 19 | -7 |
| | U-MN 3 | 11 | 1 | 3 | 4 | 7 |
| | U-MN 2 | 4 | 1 | 1 | 2 | 2 |
| | U-MN 1 | 57 | 47 | 37 | 84 | -27 |
| சிற்றூழியர்கள் | U-PL 3 | 27 | 66 | 2 | 68 | -41 |
| | U-PL 2 | 30 | 22 | 6 | 28 | 2 |
| | U-PL 1 | 130 | 80 | 4 | 84 | 46 |
| **மொத்தம்** | | **720** | **387** | **143** | **530** | **190** |


| திருகோணமலை வளாகம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஊழியர் பிரிவு | சம்பள அளவீடு | அனுமதிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | பூர்த்தி செய்யப்பட்டுள்ள ஊழியர் எண்ணிக்கை | | | ஊழியர் வெற்றிடம் |
| | | | ஆண் | பெண் | மொத்தம் | |
| கல்விசார் ஊழியர்கள் | U-AC 3 to U-AC 5 | 45 | 15 | 24 | 39 | 6 |
| | U-AC 1 to U-AC 2 | 2 | 0 | 6 | 6 | -4 |
| நூலகம் (கல்விசார் ஊழியர்கள்) | U-AC 5 | - | - | - | - | - |
| | U-AC 4 | - | - | - | - | - |
| | U-AC 3 | 1 | 0 | 1 | 1 | 0 |
| நிர்வாக ஊழியர்கள் | U-EX 3 | - | - | - | - | - |
| | U-EX 2 | 3 | 1 | 0 | 1 | 2 |
| | U-EX 1 | 5 | 3 | 3 | 6 | -1 |
| பிற நிர்வாக ஊழியர்கள் | U-EX 3 | - | - | - | - | - |
| | U-EX 2 | - | - | - | - | - |
| | U-EX 1 | - | - | - | - | - |
| | U-MO 2 | - | - | - | - | - |
| | U-MO 1 | 1 | - | - | 0 | 1 |
| உதவி கல்விசார் ஊழியர்கள் | U-AS 2 | 5 | 2 | 0 | 2 | 3 |
| | U-AS 1 | 2 | 1 | 0 | 1 | 1 |
| தொழிநுட்ப ஊழியர்கள் | U-MT 1 | 4 | 1 | 1 | 2 | 2 |
| | U-MN 4 | - | - | - | - | - |
| | U-MN 3 | 2 | - | - | 0 | 2 |
| | U-MN 2 | 0 | 1 | 0 | 1 | -1 |
| | U-MN 1 | - | - | - | - | - |
| | U-EX 2 | - | - | - | - | - |
| | U-EX 1 | - | - | - | - | - |
| எழுதுவினைஞர்கள் | U-MN 4 | 0 | 1 | 1 | 2 | -2 |
| | U-MN 3 | 4 | 1 | 2 | 3 | 1 |
| | U-MN 2 | 1 | 2 | 0 | 2 | -1 |
| | U-MN 1 | 28 | 9 | 9 | 18 | 10 |
| சிற்றூழியர்கள் | U-PL 3 | 7 | 11 | 0 | 11 | -4 |
| | U-PL 2 | 1 | 7 | 0 | 7 | -6 |
| | U-PL 1 | 16 | 1 | 0 | 1 | 15 |
| **மொத்தம்** | | **127** | **56** | **41** | **97** | **30** |

கல்விசார் ஊழியர்களான பேராசிரியர்கள், சிரேஸ்ட விரிவுரையாளர்கள் மற்றும் விரிவுரையாளர்களுக்கு இடையேயான விகிதாராசப் பரம்பல் கீழே காட்டப்பட்டுள்ளது.

**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை**




**திருகோணமலை வளாகம்**




***படம் 4:** கல்விசார் ஊழியர்களின் விகிதாசாரப் பரம்பல் – 2016*

## 4.3 கல்விசார் ஊழியர்களின் விபரம்

**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை**

| பாடங்கள் | ஊழியர்கள் | சம்பள அளவீடு | அனுமதிக் கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | பூர்த்தி செய்யப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | | | ஊழியர் வெற்றிடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | ஆண் | பெண் | மொத்தம் | |
| **விவசாய பீடம்** | | | | | | | |
| விவசாய உயிரியல்,<br>விவசாய இரசாயனவியல்,<br>விவசாய பொருளாதாரம்,<br>விவசாய பொறியியல்,<br>விலங்கு விஞ்ஞானம்<br>பயிர் விஞ்ஞானம் | சிரேஸ்ட பேராசிரியர் / பேராசிரியர் (Chair by add) | U-AC 5 (I) / U-AC 5 (II) | 5 | - | - | - | 5 |
| | சிரேஸ்ட பேராசிரியர் | U-AC 5 (I) | 34 | - | - | - | - |
| | பேராசிரியர் | U-AC 5 (II) | | - | 2 | 2 | 2 |
| | இணைப் பேராசிரியர் | U-AC 4 | | - | - | - | |
| | சிரேஸ்ட விரிவுரையாளர் I | U-AC 3 (I) | | 7 | 3 | 10 | |
| | சிரேஸ்ட விரிவுரையாளர் II | U-AC 3 (II) | | 6 | 7 | 13 | |
| | விரிவுரையாளர் | U-AC 3 (III) | | - | - | 0 | |
| | தகுதிகாண் விரிவுரையாளர் | U-AC 3(IV) | | 1 | 6 | 7 | |
| | தற்காலிக/ உதவி விரிவுரையாளர் | U-AC 2 | 5 | 0 | 4 | 4 | 1 |
| | தற்காலிக ஆராய்ச்சி உதவியாளர் | U-AC 2 | - | - | - | - | - |
| | தற்காலிக செய்முறையாளர் | U-AC 1 | 6 | 3 | 5 | 8 | -2 |
| | தற்காலிக பயிற்றுவிப்பாளர் | U-AC 1 | - | - | - | - | - |
| | தற்காலிக பயிற்சி ஆசான் | U-AC 1 | - | - | - | - | - |
| | **மொத்தம்** | | **50** | **17** | **27** | **44** | **6** |
| **கலை மற்றும் கலாச்சார பீடம்** | | | | | | | |
| அரபு,<br>சமய ஒப்பீடு,<br>நுண்கலைகள்,<br>புவியியல்,<br>இந்து நாகரிகம்,<br>வரலாறு,<br>இஸ்லாமிய கற்கைகள்,<br>மொழிகள்,<br>சமூக அறிவியல்<br>*Disciplines:*<br>கிறிஸ்தவம்,<br>பொருளாதாரம் | சிரேஸ்ட பேராசிரியர் / பேராசிரியர் (Chair by add) | U-AC 5 (I) / U-AC 5 (II) | 3 | - | - | - | 3 |
| | சிரேஸ்ட பேராசிரியர் | U-AC 5 (I) | 64 | - | - | - | 8 |
| | பேராசிரியர் | U-AC 5 (II) | | 1 | 1 | 2 | |
| | இணைப் பேராசிரியர் | U-AC 4 | | - | - | - | |
| | சிரேஸ்ட விரிவுரையாளர் I | U-AC 3 (I) | | 8 | 3 | 11 | |
| | சிரேஸ்ட விரிவுரையாளர் II | U-AC 3 (II) | | 22 | 3 | 25 | |
| | விரிவுரையாளர் | U-AC 3 (III) | | 1 | - | 1 | |
| | தகுதிகாண் விரிவுரையாளர் | U-AC 3(IV) | | 10 | 7 | 17 | |
| | தற்காலிக/ உதவி விரிவுரையாளர் | U-AC 2 | 2 | 3 | 12 | 15 | -13 |
| | தற்காலிக ஆராய்ச்சி உதவியாளர் | U-AC 2 | - | - | - | - | - |
- பேராதனைப் பல்கலைக்கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட உள்ளகப் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான கலப்பு வலைப்பந்தாட்டப் போட்டியில் எமது பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அணி 3ம் இடத்தினைப் பெற்றுக் கொண்டது. இதில் எமது அணியைச் சேர்ந்த Mr. S. உகந்தன் சிறந்த நடுநிலை ஆட்டக்காரர் விருதினைப் பெற்றுக் கொண்டார்.

## 6.4 நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகளின் விபரங்கள்

| 1. விவசாய பீடம் | | | |
|---|---|---|---|
| விடயம் | கலந்து கொண்டவை | நடத்தி முடித்தவை | அறிமுகப் படுத்தப்பட்டவை |
| a. பட்டப்பின் படிப்பு பட்ட கற்கை | 01 | - | - |
| b. பட்டப்பின் படிப்பு டிப்ளோமா கற்கை | - | - | - |
| c. பட்டப் படிப்புக் கற்கை | - | - | - |
| d. டிப்ளோமா கற்கை | - | - | - |
| e. சான்றிதழ் கற்கை | 01 | 01 | - |
| f. ஏனையவை(கருத்தரங்கு/ பயிற்சிப்பட்டறை) | 41 | - | - |
| **மொத்தம்** | **43** | **01** | **00** |

| 2. கலை மற்றும் கலாச்சார பீடம் | | | |
|---|---|---|---|
| விடயம் | கலந்து கொண்டவை | நடத்தி முடித்தவை | அறிமுகப் படுத்தப்பட்டவை |
| a. பட்டப்பின் படிப்பு பட்ட கற்கை | 10 | 09 | 06 |
| b. பட்டப்பின் படிப்பு டிப்ளோமா கற்கை | - | - | - |
| c. பட்டப் படிப்புக் கற்கை | 02 | 04 | - |
| d. டிப்ளோமா கற்கை | - | - | - |
| e. சான்றிதழ் கற்கை | 01 | 02 | - |
| f. ஏனையவை(கருத்தரங்கு/ பயிற்சிப்பட்டறை) | 21 | 02 | - |
| **மொத்தம்** | **34** | **17** | **06** |

| 3. வணிக மற்றும் முகாமைத்துவ பீடம் | | | |
|---|---|---|---|
| விடயம் | கலந்து கொண்டவை | நடத்தி முடித்தவை | அறிமுகப் படுத்தப்பட்டவை |
| a. பட்டப்பின் படிப்பு பட்ட கற்கை | 02 | 01 | - |
| b. பட்டப்பின் படிப்பு டிப்ளோமா கற்கை | - | - | - |
| c. பட்டப் படிப்புக் கற்கை | - | - | - |
| d. டிப்ளோமா கற்கை | - | - | - |
| e. சான்றிதழ் கற்கை | - | - | - |
| f. ஏனையவை(கருத்தரங்கு/ பயிற்சிப்பட்டறை) | 08 | 01 | 02 |
| **மொத்தம்** | **10** | **02** | **02** |

| 4. சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடம் | | | |
|---|---|---|---|
| விடயம் | கலந்து கொண்டவை | நடத்தி முடித்தவை | அறிமுகப் படுத்தப்பட்டவை |
| a. பட்டப்பின் படிப்பு பட்ட கற்கை | 10 | 02 | - |
| b. பட்டப்பின் படிப்பு டிப்ளோமா கற்கை | - | 01 | - |
| c. பட்டப் படிப்புக் கற்கை | - | - | - |
| d. டிப்ளோமா கற்கை | - | - | - |
| e. சான்றிதழ் கற்கை | 02 | 02 | - |
| f. ஏனையவை(கருத்தரங்கு/ பயிற்சிப்பட்டறை) | 06 | - | - |
| **மொத்தம்** | **18** | **05** | **00** |

| 5. விஞ்ஞான பீடம் | | | |
|---|---|---|---|
| விடயம் | கலந்து கொண்டவை | நடத்தி முடித்தவை | அறிமுகப் படுத்தப்பட்டவை |
| a. பட்டப்பின் படிப்பு பட்ட கற்கை | 01 | - | - |
| b. பட்டப்பின் படிப்பு டிப்ளோமா கற்கை | - | - | - |
| c. பட்டப் படிப்புக் கற்கை | - | - | - |
| d. டிப்ளோமா கற்கை | - | - | - |
| e. சான்றிதழ் கற்கை | 03 | 03 | - |
| f. ஏனையவை(கருத்தரங்கு/ பயிற்சிப்பட்டறை) | 36 | 36 | - |
| **மொத்தம்** | **40** | **39** | **00** |

| 6. பௌதிகக் கற்கைகள் அலகு | | | |
|---|---|---|---|
| **விடயம்** | **கலந்து கொண்டவை** | **நடத்தி முடித்தவை** | **அறிமுகப் படுத்தப்பட்டவை** |
| a. பட்டப்பின் படிப்பு பட்ட கற்கை | - | - | - |
| b. பட்டப்பின் படிப்பு டிப்ளோமா கற்கை | - | - | - |
| c. பட்டப் படிப்புக் கற்கை | - | - | - |
| d. டிப்ளோமா கற்கை | - | - | - |
| e. சான்றிதழ் கற்கை | 02 | 02 | - |
| f. ஏனையவை(கருத்தரங்கு/ பயிற்சிப்பட்டறை) | - | - | 01 |
| **மொத்தம்** | **40** | **39** | **01** |

| 7. திருகோணமலை வளாகம் | | | |
|---|---|---|---|
| **விடயம்** | **கலந்து கொண்டவை** | **நடத்தி முடித்தவை** | **அறிமுகப் படுத்தப்பட்டவை** |
| a. பட்டப்பின் படிப்பு பட்ட கற்கை | 01 | 03 | - |
| b. பட்டப்பின் படிப்பு டிப்ளோமா கற்கை | - | - | - |
| c. பட்டப் படிப்புக் கற்கை | - | - | - |
| d. டிப்ளோமா கற்கை | - | - | - |
| e. சான்றிதழ் கற்கை | - | - | - |
| f. ஏனையவை(கருத்தரங்கு/ பயிற்சிப்பட்டறை) | 32 | - | - |
| **மொத்தம்** | **33** | **03** | **00** |

## 6.5 புதிதான ஆரம்பிக்கப்பட்ட கற்றைநெறியின் விபரம்

| பீடம் | கற்கைநெறி | மொழிமூலம் | சான்றிதழ் | டிப்ளோமா | இளங்கலைப் பட்டம் | பட்டப்பின் படிப்பு டிப்ளோமா | முதுநிலை | எம் பில் | பி.எச்.டி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| விவசாய பீடம் (தற்காலிகமாக விவசாய பீடத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது) | உயிரி அமைப்பு தொழில்நுட்பம் (விவசாய தொழில்நுட்பம் மற்றும் தொழில் முனைவுதிறன்) | ஆங்கிலம் | - | - | 20.10.2016 | - | - | - | - |
| **மொத்தம்** | | | **-** | **-** | **01** | **-** | **-** | **-** | **-** |

# 7. உள்ளகக் கணக்காய்வு

## 2016ஆம் ஆண்டிற்கான கணக்காய்வுக் குழுத் தலைவரின் அறிக்கை

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை பேரவையின் கீழ் இயங்கிவரும் குழுக்களில் கணக்காய்வுக் குழுவும் ஒன்றாகும். ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட இக் குழுவானது ஒவ்வொரு ஆண்டும் கூடுவதோடு பல்கலைக்கழகத்தின் நிதி, நிர்வாகம், மனித சொத்துக்கள் மற்றும் கல்வி நிர்வாகம் என்பவை பற்றி விவாதிக்கின்றது. இதன் உறுப்பினர் தகுதி, அலுவலக நிபந்தனைகள், பொறுப்புக்கள், அதிகாரங்கள் மற்றும் தேர்தல் நடைமுறைகள் என்பன பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கையின் பேரவை ஆகியவற்றின் ஊடாக இலங்கையின் கருவூலத்தால் நிர்வகிக்கப்படுகிறது.

### 1. கணக்காய்வு குழுவின் குறிப்பு நிபந்தனைகள்:

i. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பொறுப்புக்களை தீர்மானித்தல் மற்றும் வருடாந்த கணக்காய்வுத் திட்டங்களை ஆய்வு செய்தல்.

ii. பல்கலைக்கழகத்தின் சகல நடவடிக்கைகளுக்குமான உள்ளகக் கட்டுப்பாட்டு அமைப்புகளை மதிப்பாய்வு மற்றும் மதிப்பீடு செய்தல்

iii. உள்ளகக் கணக்காய்வாளரினால் தயாரிக்கப்பட்ட வருடாந்த கணக்காய்வுத் திட்டம் மற்றும் வேலைத் திட்டத்தை முற்பார்வை மற்றும் பரிந்துரை செய்தல்.

iv. செலவு செயல்திறனை தொடர்ச்சியான இடைவெளியில் செயல்திறன் மதிப்பாய்வு செய்தல் மற்றும் வீணான செலவுகளை அகற்றுதல்.

v. வெளிப்புறக் கணக்காய்வாளர்களுடன் தொடர்பு கொள்வதோடு கணக்காளர் நாயகத்தின் அல்லது வெளிப்புற கணக்காய்வாளர்களின் முகாமைத்துவக் கடிதங்களைப் பின்பற்றுதல்.

vi. சட்டங்கள், ஒழுங்குமுறைகள், விதிகள் மற்றும் சுற்றறிக்கைகள் பொருந்தியுள்ளதா என்பதை உறுதிப்படுத்துதல்.

vii. கணக்கியல் தரநிலைகளுடனான இணக்கத்தை உறுதிப்படுத்த நிதி அறிக்கைகளை மதிப்பாய்வு செய்தல்.

viii. உள்ளகக் கணக்காய்வு அல்லது வெளிப்புறக் கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் தீர்வு நடவடிக்கைகளுக்கான முகாமைத்துவக் கடிதங்கள் என்பவற்றை மதிப்பாய்வு செய்தல்.

ix. பொது நிறுவன செயற்குழுக்களின் வழங்கப்படும் பரிந்துரைகள்/ வழிகாட்டுதல்களை செயற்படுத்துவதை மதிப்பாய்வு செய்தல்.

x. வருடாந்த அறிக்கையில் சேர்த்துக் கொள்வதற்காக குழுவினால் கண்டறியப்பட்ட விடயங்களிற்கான அறிக்கையை தயாரித்தல்.

## 2. கணக்காய்வுக் குழுவின் உறுப்பினர்கள்

| உறுப்பினரின் பெயர் | பதவி மற்றும் தகுதி |
|---|---|
| **(a) பேரவையினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்** | |
| 1. Mr A ஞானதாசன் (தலைவர்) | ஜனாதிபதி ஆலோசகர்/ ஓய்வு பெற்ற மேலதிக பொது வழக்குறைஞர் |
| 2. Mr.P.T.A. ஹசன் | தலைமை நிர்வாக அதிகாரி, சக நிதி கணக்கியல் நிறுவனம் (இங்கிலாந்து) |
| 3. Mr R கண்ணன் | சட்ட வழக்கறிஞர் |
| **(b) முன்னாள் அலுவலக உறுப்பினர்கள்** | |
| 4. Mr A பகிரதன், (45வது கூட்டம் வரை)<br>Mr V காண்டீபன் | பதில் பதிவாளர்<br>பதிவாளர் (on Sabbatical Leave) |
| 5. Mr S திருவருட்செல்வன் | சிரேஸ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர் |
| **(c) பார்வையாளர்கள்** | |
| 6. Mr S முருகுப்பிள்ளை(45வது கூட்டம் வரை)<br>Mr Mr A M மஹிர் | குழு அதிகாரி/கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்<br>கணக்காய்வு மேற்பார்வையாளர் (EUSL), கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம் |
| 7. Mr M M J R பொகமுவ | உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு |
| **(d) அழைப்பாளர்** | |
| 8. பொக்கிஷதாரர் (அழைப்பின் பெயரில்) | |

## 3. கூட்டங்கள்

பொது நிறுவன சுற்றறிக்கை PED / 31 இன் படி, கணக்காய்வுக் குழுவானது ஒரு ஆண்டுக்கு குறைந்தபட்சம் 4 முறை சந்திக்க வேண்டும். இவ் ஆண்டு பரிசீலனைக்காக எமது குழு 8 தடவைகள் கூடியுள்ளது. பல்கலைக்கழகத்தின் பேரவைக்கு, குழுவின் பரிந்துரைகள் அனுமதி மற்றும் தேவையான நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டது. நடைபெற்ற கூட்டங்களின் விபரங்கள் கீழ்வருமாறு;

| இல | கூட்ட இலக்கம் | திகதி |
|---|---|---|
| 1 | 44வது கணக்காய்வுக் குழுக் கூட்டம் | 30.01.2016 |
| 2 | 45வது கணக்காய்வுக் குழுக் கூட்டம் | 26.02.2016 |
| 3 | 46வது கணக்காய்வுக் குழுக் கூட்டம் | 30.04.2016 |
| 4 | 47வது கணக்காய்வுக் குழுக் கூட்டம் | 25.06.2016 |
| 5 | 48வது கணக்காய்வுக் குழுக் கூட்டம் | 28.09.2016 |
| 6 | 49வது கணக்காய்வுக் குழுக் கூட்டம் | 22.10.2016 |
| 7 | 50வது கணக்காய்வுக் குழுக் கூட்டம் | 26.11.2016 |
| 8 | 51வது கணக்காய்வுக் குழுக் கூட்டம் | 30.12.2016 |

## 4. ஆண்டிற்கான செயற்பாடுகள்:

இந்த ஆண்டு மதிப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்ட குழுவின் நடவடிக்கைகள் பின்வருமாறு.

### (a) உள்ளகக் கணக்காய்வு:

- ***உள்ளக கணக்காய்வுத் திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டத்தை சிபாரிசு செய்தல் மற்றும் கண்காணித்தல்***

  முந்தைய அனுபவத்தின் படி, கணக்காய்வு திட்டங்களில் பின்வரும் சில சோதனைப் பகுதிகளை அதிகரிக்க குழு பரிந்துரைத்திருந்தது.

  - வருடாந்த சரிபார்ப்பு 60% இலிருந்து 75% ஆக கட்டாயம் அதிகரிக்க வேண்டும்.
  - தனிப்பட்ட கோப்புக்கள் 50% இலிருந்து 80% ஆக கட்டாயம் அதிகரிக்க வேண்டும்.
  - கொள்வனவு மற்றும் வங்கி சமரசம் 100% ஆக இருக்க வேண்டும்.
  - சம்பள முறை உள்ளடக்கப்பட வேண்டும். (ஊழியர் சம்பளம் & ஊதியம்)

  மேலும், இந்த ஆண்டு முழுவதும் குழு அதன் நிலையைக் கண்காணித்தது.

- ***உள்ளகக் கணக்காய்வுப் பணிகளை மீளாய்வு செய்தல் மற்றும் கண்காணித்தல்.***

  இக் குழு உள்ளகக் கணக்காய்வாளர் அறிக்கைகள், குறிப்புக்கள் மற்றும் வினவல்கள் என்பவற்றை மதிப்பாய்வு செய்ததுடன் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்கு நிர்வாகத்திற்கு தேவையான வழிகாட்டுதல்களையும் பரிந்துரைகளையும் வழங்கியிருந்தது.

### (b) வருடாந்த அறிக்கை மற்றும் வருடாந்த கணக்குகள்:

குறித்த ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை தயாரிப்பின் முன்னேற்றம் தொடர்பில் குழு பரிசீலனை செய்தது மற்றும் சரியான நேரத்திற்கு சமர்ப்பிப்பது தொடர்பிலும் உறுதிப்படுத்தியது. மேலும், பல்கலைக்கழகத்தின் வருடாந்த கணக்கறிக்கை தயாரித்தல் தொடர்பிலும் தொடர்ந்து பரிசீலனை மேற்கொண்டது.

### (c) வெளிப்புற கணக்காய்வு:

கணக்காய்வு வினவைகள் மற்றும் வெளிப்புற கணக்காய்வாளர்களினால் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு முறைகளுக்கு இணங்க ஆண்டு முழுவதும் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்த அறிக்கை ஆகியவற்றை குழு மதிப்பாய்வு செய்தது.

### (d) உள்ளகக் கட்டுப்பாட்டு அமைப்பை மதிப்பாய்வு செய்தல் மற்றும் கண்காணித்தல்:

- ***வருடாந்த சரிபார்ப்பு மற்றும் நிலையான சொத்து பதிவு***

  பல்கலைக்கழகத்தின் வருடாந்த சபை ஆய்வினை உரிய காலத்தில் பூர்த்தி செய்வதிலுள்ள முன்னேற்றத்தை குழுவானது தொடர்ச்சியாக மதிப்பாய்வு மற்றும் கண்காணிப்பு செய்தது. மேலும், நிலையான சொத்துக்களிற்கான மென்பொருளை பூர்த்தி செய்வதை கண்காணித்ததோடு தேவையான வழிவகைகளையும் வழங்கியது. Mr M M J R பொகமுவ, உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு, இவரிடமிருந்து

இந்தப் பணியை நிறைவேற்றுவதற்காக ஆலோசனையையும் உதவியையும் பெற்றுள்ளது.

- ***நூலக புத்தகங்கள்***

  பிரதான நூலகம் மற்றும் திருகோணமலை வளாகம் என்பவற்றிலுள்ள நூலகப் புத்தகங்கள் மற்றும் பத்திரிகைகளைத் திரும்பப் பெறும் செயல்முறை தொடர்பில் குழு தொடர்ச்சியாகக் கண்காணிப்புச் செய்தது. மேலும் சரியான உள்ளகக் கட்டுப்பாட்டைப் பின்பற்ற தேவையான பரிந்துரைகளை வழங்கியது.

- ***தீர்க்கப்படாத முற்கொடுப்பனவுகள் மற்றும் கடன்களை திருப்பியடைத்தல்***

  கடன் மற்றும் முற்கொடுப்பனவுகளை திருப்பிச் செலுத்தும் செயல்முறை தொடர்பில் குழுவானது முக்கிய கவனம் செலுத்தியிருந்தது மேலும் மதிப்பீட்டு ஆண்டு முழுவதும் திருப்பிச் செலுத்தும் நடவடிக்கைகளை மிக நெருக்கமாகக் கண்காணித்தது. மேலும், குழுவானது முறையான உள்கட்டுப்பாட்டை பராமரிக்கும் பொருட்டு திருப்பிச் செலுத்தப்படாத நீண்டகால முற்கொடுப்பனவுகள் மற்றும் அடையாளம் காணப்படாத அல்லது மீட்க முடியாத கடன் நிலுவைகள் என்பவற்றை தீர்ப்பது தொடர்பில் தேவையான பரிந்துரைகளை முன்வைத்தது.

- ***அடையாளம் காணப்படாத நேரடி கடன் மற்றும் பற்றுக்கள்***

  பல்கலைக்கழக நிர்வாகமானது சமூகக் குழப்பம் காரணமாக சீர்குலைந்திருந்த காலப்பகுதியான 2009 ஆம் ஆண்டிற்கு முன்னர் பெறப்பட்ட அடையாளம் தெரியாத நேரடி கடன்கள் மற்றும் பற்றுக்கள் தொடர்பில் குழுவானது தீவிர கவனம் செலுத்தியிருந்தது. மேலே குறிப்பிட்டுள்ளபடி, நிதி ஒழுங்குமுறை 109 இன் அடிப்படையில் உரிய அதிகாரிகளின் ஒப்புதலைப் பெறுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொளுமாறு பேரவைக்கு குழு பரிந்துரை செய்தது.

### (e) பெறுநிறுவனத் திட்டம் மற்றும் பெருந்திட்டம்

- ***பெருநிறுவன திட்டம்***

  நல்ல நிர்வாகத்தின் பொது நிறுவன வழிகாட்டுதல்களில் வரையறுக்கப்பட்ட தரநிலைப்படி, பெருநிறுவனத் திட்டத்தை தயாரிப்பதற்கான முன்னேற்றத்தை தொடர்ந்து குழு ஆய்வு செய்து கண்காணித்து வருகிறது.

  நிறுவன முடிவுகளின் கட்டமைப்பைத் (Organisational Result Framework) தயாரிப்பதற்காக ஊழியர்களுக்கு தொடர்ச்சியான பயிற்சிப் பட்டறைகளை நடாத்த குழு பரிந்துரை செய்தது.

- ***பெருந்திட்டம்***

  EUSL க்கு சொந்தமான பெரும்பாலான நிலப்பகுதி தலைப்புப் பத்திரம் அல்லது உரிமங்களைக் கொண்டிருக்கவில்லை என்பதை குழு கண்டறிந்தது. மேலும் குழு இது தொடர்பில் தீவிர கவனம் செலுத்தியதுடன் அந்த நிலப்பகுதிகளுக்கான உரிமங்கள் அல்லது தலைப்புப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கான தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பேரவைக்கு பரிந்துரை செய்தது. இதன் விளைவாக இந்த விடயத்தை கையாழ்வதற்காக

ஓர் ஆலோசகர் நியமிக்கப்பட்டதோடு மேலும் இப்போது வந்தாறுமூலை வளாகத்திலுள்ள நிலப்பரப்புகளிற்கு EUSL இனால் தலைப்புப் பத்திரம் பெறக்கூடியதாக உள்ளது. நில விடயங்களிற்கான ஆலோசகரின் உதவியுடன் ஏனைய நிலப்பரப்புகள் தொடர்பாகவும் நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது.

**(f) ஒப்பந்தப் பத்திரம் மற்றும் உடன்படிக்கை உடைப்பு**

குழுவானது ஒப்பந்தப் பத்திரத்தை மீறிய ஊழியர்களிடமிருந்து அதை மீட்டெடுக்கும் செயல்முறையின் நிலை தொடர்பாக தொடர்ச்சியான மீளாய்வு மற்றும் கண்காணிப்பினை மேற்கொண்டது. இதன் விளைவாக ஒப்பந்தப் பத்திரத்தை மீறிய சில ஊழியர்களிடமிருந்து சாதகமான பதிலினைப் பெறக்கூடியதாக இருந்தது. ஒப்பந்தப் பத்திரத்தை மீறிய ஆறு ஊழியர்களிற்கு எதிராக ஆரம்பக்கட்ட சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது மற்றும் ஒப்பந்தப் பத்திரத்தை மீறிய ஐந்து ஊழியர்களிற்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளது. சட்டப்பூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்ள சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு ஒப்பந்தப் பத்திரத்தில் தவறிழைத்தவர்கள் 74 பேர் உட்பட 12 வழக்குகள் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**(g) வரவு செலவு திட்டத்தின் கட்டுப்பாடு**

சரியான நிதி கட்டுப்பாடு மற்றும் அதன் ஒதுக்கீடு ஆகியவற்றை உறுதி செய்ய உண்மையான செயல்திறனிற்கு எதிராக வரவுசெலவுத் திட்ட முன்னேற்பாட்டினை குழுவானது கவனமாக உற்றுநோக்கி கண்காணித்தது.

## 5. முடிவுரை:

கணக்காய்வுக் குழு உறுப்பினர்களின் செயல்திறனான பங்களிப்பு மற்றும் பல்கலைக்கழகத்தின் நல்லாட்சி நோக்கிய அவர்களின் அர்ப்பணிப்பு என்பவற்றில் குழு திருப்பி அடைந்தது. குழுவின் செயலாளராக தனது பங்கினை நிறைவேற்றுவதில் சிரேஸ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளரின் செயற்பாடுகளில் குழு திருப்பி அடைந்துள்ளது. குழுவால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அடையப்பட்ட முன்னேற்றங்களில் குழு திருப்பியடைந்துள்ளதோடு நல்லாட்சி, வெளிப்படைத்தன்மை, சரியான நிதியியல், நிர்வாக மற்றும் கல்வி செயல்திறன் ஆகியவற்றை செயல்படுத்துவதை தொடர்ந்தும் வலியுறுத்துகிறது

**தலைவர்,**
**கணக்காய்வு குழு**
**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை**

## 8. இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின், 2016 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மீது 1978 இன் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

C 46

**විගණකාධිපති දෙපාර්තමේන්තුව**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்**
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය / எனது இல. / My No. } ENP/BT/C/EUSL/01/16/10 — ඔබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 30 August 2017

EASTERN UNIVERSITY, SRI LANKA
5363(a)
29 SEP 2017
03.45 pm
VICE-CHANCELLOR'S OFFICE

Vice Chancellor,

Eastern University of Sri Lanka

**Report of the Auditor General on the Financial Statements of the Eastern University of Sri Lanka for the year ended 31 December 2016 in terms of Sub - Section 108(1) of the Universities Act, No.16 of 1978.**

---

Reference to my letter of even number dated 27 July 2017 on the above subject.

02. The Tamil version of the above mentioned report is sent herewith.

W.Premananda

Additional Auditor General

For Auditor General

Copies : 1. The Secretary, - Ministry of Higher Education and Highways

2. The Secretary, - Ministry of Finance and Mass Media

3. The Chairman - University Grant Commission

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka

+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } ஈஎன்பி/பீரீ/சீ/ஈயூஎஸ்எல்/01/16/10

ඔබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2017 யூலை 27

உப வேந்தர்,
இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம்

**இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல் (எஸ்எல்பிஎஸ்ஏஎஸ்)

**எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 7 - ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நியமத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்கள் ஒன்றாக கொள்வனவு செய்யப்படுகின்ற போதும் கூட அவை தனித்தனியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 1,915,507,577 தொகையான பல்கலைக்கழகத்தின் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதியானது காணியின் பெறுமதியை தனியாக காட்டாமல் ஒன்றாக சேர்த்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுகளின் போது பல்கலைக்கழகத்தால் ரூபா 4,597,940 மொத்தக் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டு முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட மூன்று வாகனங்கள் இந்த நியமத்தின் 65 ஆம் பிரிவின் பிரகாரம் அவற்றின் ஆயுட்காலத்தை மீளாய்வு செய்யாமலும் மாற்றங்களைக் கணக்கீடு செய்யாமலும் பல்கலைக்கழகத்தால் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டுக்கொண்டிருந்தன.

### 2.2.2. கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திருகோணமலை வளாகத்திலுள்ள தகவல் தொழில்நுட்ப நிலையத்தின் கட்டிட நிர்மாணம் பூர்த்திசெய்யப்பட்டு பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ஒப்பந்ததாரரிற்கு செலுத்த வேண்டிய ரூபா 12,259,371 தொகை கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வளாகக் கட்டிடங்கள், நீர்ப்பம்பி இல்லத்துடனான நீர்த்தாங்கி, நீர் வழங்கல் அபிவிருத்தி, மின்சார அபிவிருத்தி, ஜெனரேட்டர் அறை, சுற்றுமதில் மற்றும் விளையாட்டு மைதானம் போன்ற ஏழு நிர்மாண வேலை விடயங்கள் 2010 தொடக்கம் 2012 வரையான காலப்பகுதியின் போது ரூபா 113,508,496 மொத்தக் கிரயத்தில் பூர்த்திசெய்யப்பட்டிருந்த போதிலும் அந்த பூர்த்திசெய்யப்பட்ட வேலைகளின் மொத்தப் பெறுமதியானது ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கீழ் காட்டப்படுவதற்குப் பதிலாக செயன்முறையிலுள்ள மூலதன வேலைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு முழுமையாக பெறுமனத்தேய்விடப்பட்ட பஸ் ஒன்றின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட ரூபா 327,000 தொகை நிதிச் செயலாற்றல் கூற்றில் காட்டப்படாமல் நானாவிதக் கடன்கொடுத்தோர் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஈ) பல்கலைக்கழகத்தால் பேணப்பட்ட பேரேட்டுக் கணக்குகளின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான பல்கலைக்கழக சேமலாப நிதியக் கடன் மீதி ரூபா 113,391,627 தொகையாகும். எவ்வாறாயினும், இந்தக் கடன் மீதியானது ரூபா 112,243,299 ஆக நிதிக்கூற்றிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. இதன் விளைவாக, பல்கலைக்கழக சேமலாப நிதியக் கடன் மீதியானது நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 1,148,328 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு ரூபா 3,253,617 மொத்தப் பெறுமதியான பல்கலைக்கழகத்தின் மானிட உயிரியல் பிரிவு, இரசாயனவியல் பிரிவு, உடற்கூற்றுப் பிரிவு, பயிர் விஞ்ஞானப் பிரிவு மற்றும் விவசாய இரசாயனவியல் பிரிவு என்பவற்றின் 183 நுகர்வு மற்றும் இரசாயனப் பொருட்களின் இருப்பு மீதிகள் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 1996 தொடக்கம் 2016 வரையான காலப்பகுதியின் போது பல்கலைக்கழகத்தின் வங்கிக் கணக்கிற்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,639,218 மற்றும் ரூபா 4,025,059 தொகையான முறையே நேரடிச் செலவு மற்றும் வரவுகள் இனங்காணப்பட்டு உரிய கணக்குகளிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் கணக்கு விடயங்களிற்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்று கணக்காய்விற்காக கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

| கணக்கு விடயம் | பெறுமதி | கிடைக்கப்பெறாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| நூலகப் புத்தகங்கள் மற்றும் பருவகால வெளியீடுகள் | 19,082,790 | பொருள் மெய்மையாய்வு அறிக்கை |
| பண்ணை விலங்குகள் | 87,187 | விவசாய பீடத்தின் பண்ணையிலுள்ள 60 விலங்குகள் இறந்தமை தொடர்பான மிருக வைத்தியரின் அறிக்கை |

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிற்கான தாபன விதிக்கோவையின் XX ஆம் அத்தியாயத்தின் 3.1 மற்றும் 3.2 ஆம் பிரிவுகள் | ஒவ்வொரு உயர் கல்வி நிறுவனத்திலும் வேலைக்கமர்த்தப்பட்ட ஒவ்வொரு நபரும் வருகைப் பதிவேட்டில் உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் நேரங்களை பதிவுசெய்ய வேண்டிய போதிலும் பல்கலைக்கழகத்தின் கல்விசார் பதவியணியினர் அவர்களின் உள்வருகை மற்றும் வெளிச்செல்லலைக் குறிப்பிட்டிருக்கவில்லை. ஆகையால் |

| | |
|---|---|
| | மீளாய்வாண்டின் போது 257 கல்விசார் பதவியணியினருக்கு அவர்களின் வருகையை உறுதிப்படுத்தாமல் பல்கலைக்கழகம் ரூபா 407,738,731 கூட்டுத்தொகையான சம்பளங்கள் மற்றும் ஊதியங்களை செலுத்தியிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| நிதிப்பிரமாணங்கள் 102 – 104 | பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான வாகனமொன்று விபத்துக்குள்ளாகியிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அதன் மீது ரூபா 77,250 தொகையான திருத்தக் கிரயம் செலுத்தப்பட்டிருந்தது. எனினும், நட்டங்களின் அளவு மற்றும் காரணத்தை மதிப்பிடுவதற்கும் பொறுப்புக்களை நிர்ணயிப்பதற்கும் விசாரணைச் சபையை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| நிதிப்பிரமாணம் 571 | ரூபா 8,143,021 கூட்டுத்தொகையான இருபத்தியொரு மீளளிக்கக்கூடிய வைப்புக்கள் 2 ஆண்டுகள் தொடக்கம் 12 ஆண்டுகள் வரையிலான காலவீச்சில் இருந்தன. எனினும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் இது தொடர்பில் அவசியமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**போதியளவு அதிகாரத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிற்கான தாபன விதிக்கோவையின் 03 ஆம் அத்தியாயத்தின் 26:5 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்திலிருந்து உத்தியோகத்தர்களை தானாகவே வருகை விரிவுரையாளர்களின் பதவிக்காக நியமனம் செய்ய முடியாத போதிலும் பல்கலைக்கழகத்தின் 05 பீடங்களின்

பதவியணியினரிலிருந்து 27 வருகை விரிவுரையாளர்களை பல்கலைக்கழகம் நியமனம் செய்திருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அந்த விரிவுரையாளர்களிற்கான கட்டணங்களாக ரூபா 696,250 மொத்தத் தொகையை செலுத்தியிருந்தது.

(ஆ) 2011 ஏப்பிரல் 20 ஆம் திகதிய 01/2011 ஆம் இலக்க உயர் கல்விச் சுற்றறிக்கை மற்றும் 2014 பெப்ரவரி 11 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம், ஆராய்ச்சிக் குழுவின் அங்கீகாரத்துடன் அவர்களின் ஆராய்ச்சி முன்மொழிவுகளை சமர்ப்பித்திருக்காத கல்விசார் பதவியணியினர் ஆராய்ச்சிப் படிகளை பெறுவதற்குத் தகுதியற்றவர்களாவர். எவ்வாறாயினும், ஆராய்ச்சிக் குழுவிடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்றிருக்காத கலை மற்றும் கலாச்சார பீடத்தின் 53 கல்விசார் பதவியணியினர் மீளாய்வாண்டின் போது ரூபா 8,864,434 கூட்டுமொத்தமான ஆராய்ச்சிப் படிகளைப் பெற்றிருந்தனர்.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 157,502,871 தேறிய பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ரூபா 107,259,847 ஆன தேறிய பற்றாக்குறையொன்றினை விளைவித்திருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 50,243,024 ஆன முன்னேற்றமொன்றினை காட்டுகின்றது. மீண்டெழும் மானியம் ரூபா 205,897,000 ஆல் அதிகரித்தமை இந்த முன்னேற்றத்திற்குப் பிரதானமாக பங்களித்திருந்தது.

### 3.2 பல்கலைக்கழகத்தின் பெறுமதிச் சேர்க்கை

மீளாய்வாண்டிற்கான தேறிய பற்றாக்குறை ரூபா 107,259,847 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது நாட்டிற்கான பல்கலைக்கழகத்தின் பங்களிப்பு ரூபா 874,297,000 ஆக இருந்தது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய நான்கு ஆண்டுகளின் போது நாட்டிற்கான பல்கலைக்கழகத்தின் பங்களிப்பு பின்வருமாறு உள்ளது.

| | 2016 | 2015 | 2014 | 2013 | 2012 |
|---|---|---|---|---|---|
| | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 |
| மிகை/ (பற்றாக்குறை) | (107,300) | (157,503) | (76,653) | (127,102) | (63,431) |
| கூட்டு: | | | | | |
| • ஆளணி வேதனங்கள் | 790,536 | 704,978 | 530,130 | 453,080 | 359,600 |
| • பெறுமானத்தேய்வு | 191,061 | 173,457 | 105,759 | 82,195 | 68,879 |
| மொத்தப் பங்களிப்பு | 981,597 | 878,435 | 635,889 | 535,275 | 428,479 |
| பெறுமதிச் சேர்க்கை | 874,297 | 720,932 | 559,236 | 408,173 | 365,048 |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தின் கல்விசார் செயலாற்றல்கள் பின்வருமாறு உள்ளன.

#### (அ) பட்டக் கற்கைநெறிகள்

மீளாய்வாண்டு மற்றும் கடந்த இரண்டு ஆண்டுகளின் போது ஒவ்வொரு பீடத்திற்கும் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| பீடங்கள் | சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| | 2016 | 2015 | 2014 |
| கலை மற்றும் கலாச்சாரம் | 386 | 104 | 450 |
| வணிக மற்றும் முகாமைத்துவம் | 182 | 184 | 200 |
| விஞ்ஞானம் | 138 | 90 | 90 |

| | | | |
|---|---|---|---|
| சுகாதாரப் பராமரிப்பு விஞ்ஞானம் | 80 | 201 | 300 |
| விவசாயம் | 42 | 80 | 120 |
| தொடர்பாடல் மற்றும் வணிகக்கல்வி | 148 | 136 | 151 |
| பிரயோக விஞ்ஞானம் | 35 | 31 | 92 |
| சித்த மருத்துவப் பிரிவு | 48 | 49 | 51 |
| மொத்தம் | **1,059** | **875** | **1,454** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் போது சுகாதாரப் பராமரிப்பு விஞ்ஞான பீடம் மற்றும் விவசாய பீடம் என்பவற்றிற்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளல் 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது முறையே 73 சதவீதத்தாலும் 65 சதவீதத்தாலும் குறைவடைந்திருந்த அதேநேரம் 2016 ஆம் அண்டின் போது விஞ்ஞான பீடத்திற்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளல் 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 53 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ii) மீளாய்வாண்டின் போது அனைத்துப் பீடங்களிற்கான மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளல் 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 27 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

**(ஆ) மாணவரொருவருக்கான கிரயம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரண்டு ஆண்டு காலப்பகுதிக்காக பல்கலைக்கழகத்தில் பதிவுசெய்யப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை மற்றும் செயற்பாட்டுச் செலவினங்களை அடிப்படையாகக்கொண்டு மாணவரொருவருக்கான கிரயம் என்பன கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| | 2016 | 2015 | 2014 |
|---|---|---|---|
| மொத்தக் கிரயம் (ரூபா ’000) | 1,296,021 | 1,143,866 | 879,368 |
| மாணவர்களின் மொத்த எண்ணிக்கை | 4,438 | 4,890 | 4,467 |
| மாணவரொருவருக்கான கிரயம் (ரூபா) | 292,028 | 233,919 | 196,859 |

(i) 2016 ஆம் ஆண்டிற்கான பல்கலைக்கழகத்தின் மாணவரொருவருக்கான கிரயம் 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 48 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ii) 2016 ஆம் ஆண்டிற்கான பல்கலைக்கழகத்தின் மாணவரொருவருக்கான கிரயம் ரூபா 292,028 தொகையான அதேநேரம் அந்த ஆண்டிற்கான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மாணவரொருவருக்கான கிரயம் ரூபா 266,178 தொகையாக இருந்தது. அதற்கிணங்க, பல்கலைக்கழகத்தின் மாணவரொருவருக்கான கிரயமானது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மாணவரொருவருக்கான கிரயத்தை விட ரூபா 25,850 ஆல் உயர்வாக இருந்தது.

**(இ) கற்றல்களுக்காக விடுமுறை வழங்கல்**

ஐக்கிய இராச்சிய பெட்போட்சயர் (Bedfordshire) பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்கு முன்னோடியாக தத்துவவியல் முதுமானி பாடநெறியை கற்பதற்காக 2011 ஒக்தோபர் 03 தொடக்கம் 2015 ஏப்ரல் 02 வரையான மீளாய்வுக் காலப்பகுதியின் போது விரிவுரையாளரிற்கு (நன்னடத்தை) 45 மாதங்கள் கொடுப்பனவுடனும் 06 மாதங்கள் கொடுப்பனவின்றியும் கல்வி விடுமுறையை பல்கலைக்கழகம் வழங்கியிருந்ததுடன் ரூபா 9.2 மில்லியன் நிதி உதவியை செலுத்தியிருந்தது. எவ்வாறாயினும், விரிவுரையாளர் 02 ஆண்டுகள் கடந்த பின்னரும் கூட அவரது கலாநிதிப் பட்டக் கற்றல்களை பூர்த்திசெய்திருக்கவில்லை. 2017 மே 15 இலிருந்து செயற்பாட்டிற்கு வரும் வகையில் உரிய விரிவுரையாளர் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளாரென 2017 மே 15 இல் இது தொடர்பில் உப வேந்தர் எனக்கு அறிவித்திருந்தார்.

**(ஈ) வருகை விரிவுரையாளர்களின் செயலாற்றல்**

மீளாய்வாண்டின் போது சுகாதார பராமரிப்பு விஞ்ஞான பீடத்தில் விரிவுரைகளை நடாத்துவதற்கு 52 வருகை விரிவுரையாளர்களை பல்கலைக்கழகம் நியமித்திருந்ததுடன் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்ட காலப்பகுதிக்குள் பாடத்திட்டங்களை பூர்த்திசெய்வதற்கு வேண்டப்பட்டிருந்தனர். எவ்வாறாயினும், ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்ட விரிவுரை மணித்தியாலங்களில் 06 மணித்தியாலங்கள் தொடக்கம் 101 மணித்தியாலங்கள் வரையான வீச்சில் விரிவுரை மணித்தியாலங்கள் அவ் விரிவுரையாளர்களால்

பூர்த்திசெய்யப்பட்டிருக்காததுடன் அதனால் அவர்களின் விரிவுரை காலப்பகுதியின் போது அவ் விரிவுரையாளர்கள் முழுப் பாடத்திட்டத்தையும் பூர்த்திசெய்திருந்தார்களா என்பது கேள்விக்குரியதாகவுள்ளது. விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| **பாடம்** | **ஒதுக்கப்பட்ட மொத்த மணித்தியாலங்கள்** | **பூர்த்தி செய்யப்பட்ட மொத்த மணித்தியாலங்கள்** | **பூர்த்தி செய்யப்படாத விரிவுரை மணித்தியாலங்கள்** |
|---|---|---|---|
| மருத்துவம் | 55 | 14.5 | 40.5 |
| அறுவைச் சிகிச்சை | 110 | 27 | 83 |
| குழந்தையியல் | 118 | 17 | 101 |
| தடயவியல் மருத்துவம் | 30 | 24 | 06 |
| இறப்பின் புலனாய்வு | 08 | 02 | 06 |
| இரத்த நிணநீர் முறைமை குறைபாடுகள் | 20 | 02 | 18 |
| அமைப்பு மற்றும் தசை மண்டல முறைமைக் குறைபாடுகள் | 20 | 07 | 13 |

## 4.2 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) கணனிகள் மற்றும் சேவர்களின் (servers) கொள்வனவு

மீளாய்வாண்டின் போது ரூபா 20,227,663 பெறுமதியான 212 மேசைக் கணனிகளையும் 07 சேவர்களையும் பல்கலைக்கழகம் கொள்வனவு செய்திருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மாணவர் ஆய்வுகூடத்தை ஸ்தாபிப்பதற்காக 2016 யூன் 07 இல் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்திற்கான நிலையத்திற்கு (சீஐசீரீ) 75 கணனிகள் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அத்தகைய ஆய்வுகூடம் இதுவரை ஸ்தாபிக்கப்பட்டிருக்காததுடன் அதனால் ஒரு ஆண்டாக அக் கணனிகள் பயனற்றிருந்தன.

(ii) 2016 ஏப்ரல் 18 இல் கணனி ஆய்வுகூடப் பயன்பாட்டிற்காக ரூபா 3,323,530 மொத்தப் பெறுமதியான இருபத்து நான்கு கணனிகள் மற்றும் 02 சேவர்கள் கணிதப் பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், 24 கணனிகளில் 10 உம் 02 சேவர்களும் கணனி மேசைகள், கதிரைகள் மற்றும் இணையத் தொடர்பு வசதிகள் போன்றன இல்லாமை காரணமாக ஒரு ஆண்டாக பிரிவில் பயனற்றிருந்தன.

(iii) ரூபா 4,364,559 பெறுமதியான முப்பத்தைந்து கணனிகள் மற்றும் 02 சேவர்கள் 2016 மே 05 இல் உயிர் முறைமை தொழில்நுட்பப் பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், ஒரு கணனி தவிர அனைத்து ஏனைய 34 கணனிகளும் கணனி மேசைகள், கதிரைகள் மற்றும் இணையத் தொடர்பு வசதிகள் போன்றன இல்லாமை காரணமாக 2017 ஏப்ரல் 20 வரை பயன்படுத்தப்படாதிருந்தன.

**(ஆ) மைக்கிறோரொம் (microtome) இன் கொள்வனவு – பைன்ஸே325 (finesse325)**

---

தாவரவியலை அவர்களின் பட்டக் கற்கைநெறியாக தெரிவுசெய்கின்ற மாணவர்களால் பயன்படுத்துவதற்காக தாவரவியல் பிரிவின் தலைவரால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுதல் மீது ரூபா 1,325,000 கிரயத்தில் 2016 பெப்ரவரி 15 இல் மைக்கிறோரொம் – பைன்ஸே325 ஐ பல்கலைக்கழகம் கொள்வனவு செய்திருந்தது. எவ்வாறாயினும் அவர்களின் விசேட கற்கைநெறியாக தாவரவியலை தெரிவுசெய்வதற்காக விசேட பட்டக் கற்கைநெறி மாணவர் காணப்படாததால் 2017 யூன் 20 வரை இது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.3 முகாமைத்துவப் பலவீனங்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பதவிகள் வறிதாக்கப்பட்ட மற்றும் சேவைகளிலிருந்து ஓய்வுபெற்ற 222 கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியினரின் ரூபா 10,124,628 கூட்டுத்தொகையான கடன் மீதிகள் 05 ஆண்டுகள் தொடக்கம் 28 ஆண்டுகள் வரையான காலவீச்சில் நிலுவையாக இருந்தன. எவ்வாறாயினும், செல்லுபடியாகும் பிணைகள் எதனையும் பெற்றுக்கொள்ளாமல் மேற்குறிப்பிடப்பட்ட கடன்கள் வழங்கப்பட்டிருந்ததால் இந்நிலுவை மீதிகளை

அறவிடுவதற்கான நடவடிக்கை எதனையும் எடுப்பதற்கு பல்கலைக்கழகத்தால் முடியாதிருந்தது.

(ஆ) கலை மற்றும் கலாச்சார பீடத்தின் விரிவுரையாளரொருவரிடமிருந்து ரூபா 6,452,912 தொகை அவரது உடன்படிக்கையை மீறியதற்காக பிணைமுறிப் பெறுமதியாக அறவிடப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், அவர் நாட்டிற்குத் திரும்பியிருந்ததுடன் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு அக்கடமியில் உதவி நூலகராக இணைந்திருந்ததுடன் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வருகை விரிவுரையாளராகவும் கடமையாற்றியிருந்த போதிலும் அவரிடமிருந்து மேற்படி தொகையை அறவிடுவதற்கு 10 ஆண்டுகளிற்கு மேலாக பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) தத்துவவியல் விரிவுரையாளர் பதவிக்காக விண்ணப்பித்திருந்த உத்தியோகத்தரொருவர் அப் பதவிக்காக ஆட்சேர்ப்புச்செய்யப்பட்ட உத்தியோகத்தரை விட போதியளவு தகைமைகள் மற்றும் அனுபவத்தினை கொண்டிருந்த போதிலும் அப் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக அவர் புறக்கணிக்கப்பட்டிருந்ததால் அவர் மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்றை தொடுத்திருந்தார். இது தொடர்பில் அந்த உத்தியோகத்தரிற்கு இழப்பீடாக ரூபா 1,000,000 செலுத்துவதற்கு மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்ததுடன் அதில் ரூபா 500,000 அவருடன் இணக்கப்பாட்டிற்கு வந்த பின்னர் உத்தியோகத்தரிற்கு செலுத்தப்பட்டிருந்தது. மேலும், பல்கலைக்கழகம் சட்ட ரீதியான நடவடிக்கைகளிற்காக சட்டக் கட்டணமாக ரூபா 1,098,169 தொகையை செலவிட்டிருந்தது. இதன் விளைவாக, ஆட்சேர்ப்பு செயன்முறையிலுள்ள ஒழுங்கீனங்கள் காரணமாக ரூபா 1,598,169 நட்டம் பல்கலைக்கழகத்தில் நிலைத்திருந்தது. எவ்வாறாயினும், பல்கலைக்கழகமானது அத்தகைய ஒழுங்கீனங்களிற்குப் பொறுப்பாகவுள்ள உத்தியோகத்தரிற்கு எதிராக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) திருகோணமலை வளாகமானது விடுதிக் கட்டிடத் தொகுதியொன்றை நிர்மாணித்திருந்ததுடன் 2015 பெப்ரவரி மாதத்தில் இந்தக் கட்டிடம் திறந்துவைக்கப்பட்டிருந்தது. மேலும், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை ("சபை") இந்தக் கட்டிடத்திற்கு நீர் வழங்கல் இணைப்பினை வழங்கியிருந்ததுடன் இந்தக் கட்டிடத்திற்கு பொருத்தப்பட்ட நீர்மானி மண்ணால் மூடப்பட்டிருந்தது. ஆகையால், 2015 திசெம்பர் மாதம் வரை மாதாந்த தண்ணீர் பட்டியல் கட்டணங்களாக மதிப்பிடப்பட்ட மிகக்குறைந்த பெறுமதித் தொகையை சபை அறவிட்டிருந்தது. பின்னர் சபையானது மேற்குறிப்பிடப்பட்ட காலப்பகுதிக்கான தண்ணீர்

விலைப்பட்டியலாக ரூபா 4,775,936 ஆன மிகப் பெரிய தொகையை அறவிட்டிருந்ததுடன் 2015 நவம்பர் 11 தொடக்கம் 2016 சனவரி 18 வரையான காலப்பகுதியின் போது இந்த தொகையை செலுத்தியிருந்தது. எவ்வாறாயினும், உள்ளபடியான மானி வாசிப்புக்களின் பிரகாரம் கட்டணங்களை கணிப்பீடு செய்வதற்கு மானி வாசிப்பிற்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்கு தவறியிருந்த பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரிற்கு எதிராக பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) வெளிநாடுகளில் முதுமாணிப் பட்டங்களை தொடருவதற்கு கொடுப்பனவுடன் கற்றல் விடுமுறையை பெற்ற பின்னர் உடன்படிக்கையை மீறுவது பல்கலைக்கழகப் பதவியணியினரின் பொதுவான நடைமுறையாக உள்ளது. எவ்வாறாயினும், அவர்களிடமிருந்து செல்லுபடியாகும் பிணையை பெறுவதற்கோ அவர்களது ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து பிணைமுறி பெறுமதியை கழிப்பதற்கான ஒத்துழைப்பை பெறுவதற்கோ பல்கலைக்கழகம் இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதற்கிணங்க, அவர்களது உடன்படிக்கையை மீறியதற்காக ரூபா 159,990,645 ஆன மொத்தத் தொகை பிணைமுறிப் பெறுமதியாக 71 உத்தியோகத்தர்களிடமிருந்து 10 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருந்தன. எவ்வாறாயினும், பல்கலைக்கழகம் அவர்களிடமிருந்து செல்லுபடியாகும் பிணைகளை பெற்றுக்கொள்ளாததன் காரணமாக அந்நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

(ஊ) பல்வேறு விநியோகஸ்தர்களிற்கு செலுத்தப்பட்ட ரூபா 28,542,535 கூட்டுத்தொகையான முற்பணங்கள் 02 ஆண்டுகள் தொடக்கம் 20 ஆண்டுகள் வரையான காலவீச்சில் அறவிடப்படாதிருந்தன. எவ்வாறாயினும், 2015 ஆம் ஆண்டிற்கான எனது கணக்காய்வு அறிக்கையில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்ட போதிலும் 2017 யூன் 20 வரையிலும் அவர்களிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கையை பல்கலைக்கழகம் எடுத்திருக்கவில்லை.

(எ) 67 வெளிநாட்டு வழங்குநர்களிற்கு வழங்கப்பட்ட ரூபா 2,267,842 கூட்டுத்தொகையான முற்பணங்கள் அந்த முற்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் 12 ஆண்டுகளிற்கு மேலாக காணப்பட்டிருந்தன.

(ஏ) உத்தியோகத்தர்களிற்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் அவை வழங்கப்பட்ட நோக்கம் பூர்த்தியடைந்த பின்னர் உடனேயே தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், பல்வேறு நோக்கங்களிற்காக 164 உத்தியோகத்தர்களிற்கு வழங்கப்பட்ட ரூபா 18,088,502 கூட்டுத்தொகையான முற்பணங்கள் 07 ஆண்டுகளிற்கு மேலாக தீர்ப்பனவு செய்யப்படாதிருந்தன.

(ஐ) முற்பணமாக பதவியணியினரால் வேண்டப்பட்ட தொகை எதுவும் வேண்டப்பட்ட தொகையின் தன்மை மற்றும் நியாயத்தன்மையை மதிப்பிடாமல் பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக, 03 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்ட ரூபா 38,500 கூட்டுத்தொகையான முற்பணங்கள் காசு மூலம் முழுமையாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் 16 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்ட ரூபா 482,750 கூட்டுத்தொகையான முற்பணங்களின் 50 சதவீதம் காசு மூலம் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. இந்த நடைமுறையானது பொது நிதிகளை மோசடி செய்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்கியிருந்தது.

## 4.4 நிதிகளின் பயன்பாடு

நாட்பட்ட சிறுநீரக நோய்கள், விஞ்ஞான, பொறியியல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான விடயங்கள் மற்றும் குடியியல் சமூக கலாச்சாரம் மற்றும் பொருளாதார விடயங்கள் தொடர்பாக ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக 2016 ஆம் ஆண்டின் போது மூலதன மானியங்களின் கீழ் பெறப்பட்ட ரூபா 6,500,000 கூட்டுமொத்தமான நிதிகள் குறிப்பிடப்பட்ட நோக்கங்களிற்காக பயன்படுத்தப்படாமல் 2017 யூன் 20 வரை வங்கி நடைமுறைக் கணக்கில் கணப்பட்டது.

## 4.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஜனவரி 31 இலிருந்து பதிவாளர் பதவி வெற்றிடமாக இருந்த போதிலும் பல்கலைக்கழகமானது அந்தப் பதவிக்கு நிரந்தர உத்தியோகத்தரொருவரை நியமிப்பதற்கு இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்களின் இருபத்தொரு பதவிகள் பல ஆண்டுகளாக வெற்றிடமாக இருந்தன. இந்த நிலைமை மாணவர்களின் கல்விசார் நடவடிக்கைகளை மோசமாக பாதித்திருந்த போதிலும் இது தொடர்பில் முறையான நடவடிக்கையை பல்கலைக்கழகம் எடுத்திருக்கவில்லை.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பிரிவின் பிரகாரம், நாளதுவரையாக்கப்பட்ட அமைப்புக் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும், கட்டுநிதித் தேவைப்பாடுகள், நோக்கங்கள் மற்றும் தூரநோக்கினை அடைவதற்கான நடவடிக்கைகள் போன்ற தகவல்களை வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் உள்ளடக்க வேண்டிய போதிலும் 2016 ஆம் ஆண்டுக்காக பல்கலைக்கழகத்தால் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் மேற்குறிப்பிடப்பட்ட தகவல்களை உள்ளடக்கியிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்குக்காலம் பல்கலைக்கழக உப வேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமை மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | முற்பணங்களின் தீர்ப்பனவு | முற்பணங்களின் தீர்ப்பனவிலுள்ள நீண்ட காலதாமதங்கள். |
| (ஆ) | ஆளணி நிர்வாகம் | நிரந்தரப் பதவியணியினரை நியமனம் செய்வதன் மூலம் சிரேஷ்ட முகாமையாளர்களிற்கான வெற்றிடங்கள் நிரப்பப்படாமை மற்றும் கல்விசார் பதவியணியினரின் உள்வருகை மற்றும் வெளிச்செல்லல் பதிவுசெய்யப்படாமை. |
| (இ) | நூலக நிர்வாகம் | பொருள் மெய்மையாய்வுகளை நடாத்தத் தவறுதல். |

எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ

## 9. இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2016 மார்கழி 31ல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுகள் மீது 1978ஆம் ஆண்டு 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(1)ஆம் உப பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை தொடர்பில் கிழக்குப் பல்கலைக்கழக முகாமைத்துவத்தின் பதிலளிப்பு

| கணக்காய்வுப் பத்தியின் மேற்கோள்கள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| **2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்** | | |
| **2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல் (SLPSAS)** | | |
| **SLPSAS 7 – ஆதனம், பொறி மற்றும் உபகரணம் :** | | |
| (அ) | நியமத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்கள் ஒன்றாக கொள்வனவு செய்யப்படுகின்றபோதும் கூட அவை தனித்தனியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2016 திசெம்பர் 31இல் உள்ளவாறான ரூபா 1,915,507,577.00 தொகையான பல்கலைக்கழகத்தின் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதியானது காணியின் பெறுமதியை தனியாக காட்டாமல் ஒன்றாக சேர்த்துக் காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்படுகிறது.<br><br>கிழக்குப் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான காணி கட்டிடங்களுக்கான உரிமம் பெறுதல் மற்றும் மறுமதிப்பீட்டுச் செயற்பாடுகள் ஆலோசகர் ஒருவரின் உதவியுடன் செயற்பாட்டில் உள்ளது. இச் செயற்பாடானது முடிவடைந்ததும் மறுமதிப்பீட்டின் பெறுமதியானது 2017ஆம் ஆண்டின் நிதியறிக்கைகளில் 07ஆம் இலக்க இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் தனித்தனியாக கணக்கீடு செய்யப்படும். |
| (ஆ) | முன்னைய ஆண்டுகளின் போது பல்கலைக்கழகத்தால் ரூபா 4,597,940.00 மொத்தக் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டு முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட மூன்று வாகனங்கள் இந்த நியமத்தின் 65ஆம் பிரிவின் பிரகாரம் அவற்றின் ஆயுட்காலத்தை மீளாய்வு செய்யாமலும் மாற்றங்களைக் கணக்கீடு செய்யாமலும் பல்கலைக்கழகத்தால் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தன. | ஏற்றுக்கொள்ளப்படுகிறது.<br><br>குறிப்பிடப்பட்ட மூன்று வாகனங்களையும் மீளாய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| **2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்** | | |
| (அ) | திருகோணமலை வளாகத்திலுள்ள தகவல் தொழில்நுட்ப நிலையத்தின் கட்டிட நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டு பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ஒப்பந்ததாரரிற்கு செலுத்த வேண்டிய ரூபா 12,259,371.00 தொகை கணக்குகளிற்கு கொண்டுவரப் பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுகிறது.<br><br>31.12.2016வரை ஒப்பந்ததாரரிடமிருந்து இறுதி நிர்மாண சிட்டைகள் கிடைக்கப்பெறவில்லை. அதனால் குறித்த மீளாய்வாண்டு காலத்தில் இத்தொகையை முதலாக்க முடியவில்லை. |

| கணக்காய்வுப் பத்தியின் மேற்கோள்கள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (ஆ) | வளாகக் கட்டிடங்கள், நீர்ப்பம்பி இல்லத்துடனான நீர்த்தாங்கி, நீர் வழங்கல் அபிவிருத்தி, ஜெனரேட்டர் அறை, சுற்றுமதில் மற்றும் விளையாட்டு மைதானம் போன்ற ஏழு நிர்மான வேலை விடயங்கள் 2010 தொடக்கம் 2012 வரையான காலப்பகுதியின் போது ரூபா 113,508,496.00 மொத்தக் கிரயத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த பூர்த்தி செய்யப்பட்ட வேலைகளின் மொத்தப் பெறுமதியானது ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கீழ் காட்டப்படுவதற்குப் பதிலாக செயன்முறையிலுள்ள மூலதன வேலைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்படுகிறது.<br><br>குறிப்பிட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் மொத்தப் பெறுமதியானது 2017ன் கணக்கிற்கு கிரயப்பெறுமதியில் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்ட பஸ் ஒன்றின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட ரூபா 327,000.00 தொகை நிதிச்செயலாற்றல் கூற்றில் காட்டப்படாமல் நானாவிதக் கடன் கொடுத்தோர் கணக்கிற்கு கொண்டுவரப் பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்படவில்லை.<br><br>பஸ் விற்பனையிலிருந்து பெறப்பட்ட தொகை 31.12.2016 இல் நானாவிதக் கடன்கொடுத்தோர் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டதன் காரணம் இந்த பஸ் அரசிடமிருந்தா அல்லது வேறு யாரிடமிருந்தாவது நன்கொடையாகவா கிடைக்கப்பெற்றது என்பதை உறுதிப்படுத்தமுடியவில்லை.<br><br>எனினும் இது 2017க்குரிய கணக்கு புத்தகங்களில் சீர்செய்யப்படும். |
| (ஈ) | பல்கலைக்கழகத்தால் பேணப்பட்ட பேரேட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான பல்கலைக்கழக சேமலாப நிதியக்கடன் மீதி ரூபா 113,391,627.00 தொகையாகும். எவ்வாறாயினும் இந்தக் கடன் மீதியானது ரூபா 112,243,299.00 ஆக நிதிக்கூற்றிற்கு கொண்டுவரப் பட்டிருந்தது. இதன் விளைவாக, பல்கலைக்கழக சேமலாப நிதியக் கடன் மீதியானது நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 1,148,328.00 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்படவில்லை.<br><br>இது பத்துவருடத்திற்கு மேற்பட்டதுடன் அது தொடர்பான ஆவணங்களும் தற்போது கிடைக்கக்கூடியதாக இல்லை. ஆகவே இவை கணக்குப் புத்தகங்களில் சீராக்கப்படும். |
| (உ) | மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு ரூபா 3,253,617.00 மொத்தப் பெறுமதியான பல்கலைக்கழகத்தின் மானிட உயிரியல் பிரிவு, இரசாயனவியல் பிரிவு, உடற்கூற்றுப் பிரிவு, பயிர் விஞ்ஞானப் பிரிவு மற்றும் விவசாய இரசாயனவியல் பிரிவு என்பவற்றின் 183 நுகர்வு மற்றும் இரசாயனப் பொருட்களின் இருப்பு மீதிகள் கணக்குகளிற்கு கொண்டுவரப் பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படவில்லை.<br><br>இவை எதிர்காலத்தில் சீராக்கப்படும். |

<table>
<tr><th colspan="2">கணக்காய்வுப் பத்தியின் மேற்கோள்கள்</th><th>அவதானிப்புக்கள்</th></tr>
<tr><td>(ஊ)</td><td>1996 தொடக்கம் 2016 வரையான காலப்பகுதியின் போது பல்கலைக்கழகத்தின் வங்கிக் கணக்கிற்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,639,218.00 மற்றும் ரூபா 4,025,059.00 தொகையான முறையே நேரடிச் செலவு மற்றும் வரவுகள் இனங்கானப்பட்டு உரிய கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.</td><td>2005ஆம் ஆண்டிற்கு முற்பட்ட நேரடிச் செலவுகள் தொடர்பாக தேவையான ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதுடன் 2009க்கு முற்பட்ட காலப்பகுதிக்கான குறைபாடுகளை கூடியளவு தீர்க்கவேண்டியுள்ளதால் பேரவை இத்தொகையினை பதிவழிப்பு செய்ய அங்கீகாரம் வழங்கியுள்ளதுடன் மேல் நடவடிக்கைக்காக உயர்கல்வி அமைச்சினால் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td colspan="3">2.2.3 கணக்காய்விற்கான சான்றின்மை</td></tr>
<tr><td></td><td>பின்வரும் கணக்கு விடயங்களிற்கு எதிரே சுட்டிக்காட்டப் பட்டுள்ள சான்று கணக்காய்விற்காக கிடைக்கப் பெற்றிருக்க வில்லை.
<table>
<tr><th>கணக்கு விடயம்</th><th>பெறுமதி ரூபா</th><th>கிடைக்கப்பெற ாத சான்று</th></tr>
<tr><td>நூலகப் புத்தகங்கள் மற்றும் பருவகால வெளியீடுகள்</td><td>19,082,790.00</td><td>பொருள் மெய்மையாய்வு அறிக்கை</td></tr>
<tr><td>பண்ணை விலங்குகள்</td><td>87,187.00</td><td>விவசாய பீடத்தின் பண்ணையிலுளள 60 விலங்குகள் இறந்தமை தொடர்பான மிருக வைத்தியரின் அறிக்கை</td></tr>
</table></td><td>நூலகப் புத்தகங்கள் மற்றும் பருவகால வெளியீடுகள்:<br>ஏற்றுக்கொள்ளப்படுகிறது.<br><br>நூலகமானது அண்ணளவாக 89,000 புத்தகங்கள் மற்றும் பருவகால வெளியீடுகளை தற்போது கொண்டுள்ளது. மேலும் வருடாந்த மெய்மையாய்வானது அரையாண்டு கல்வி நடவடிக்கைகளை பாதிக்ககூடியதாகும். இருந்தபோதும் நூலக குழுவின் சிபாரிசுடன் 2017 வருடாந்த மெய்மையாய்வை மேற்கொள்ளவென ஏற்கனவே ஒரு குழுவை நியமித்துள்ளதுடன், அதனடிப்படையில் வருடாந்த மெய்மையாய்வானது நடாத்தப்படும்.<br><br>பண்ணை விலங்குகள்:<br>ஏற்றுக்கொள்ளப்படவில்லை.<br>மிருக வைத்தியரொருவரின் சிபாரிசுடன் இறந்த பெறுமதியான பண்ணை விலங்குகளை பதிவழிப்பு செய்வது பல்கலைக்கழக பண்ணையின் வழக்கமாகும். (இவை தொடர்பான ஆவணங்கள் பண்ணையில் உள்ளது).<br>மேலும் பல்கலைக்கழக தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XXV, பகுதி 2:3 பிரகாரம் ரூபா 500.00 க்கு மேற்பட்டாத இழப்புகளை அறிக்கையிடத் தேவையில்லை என்பதுதுடன் அதனடிப்படையில் இவை பதிவழிப்பு செய்யப்பட்டது.</td></tr>
</table>

| கணக்காய்வுப் பத்தியின் மேற்கோள்கள் | | | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| **2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மாணங்களுடன் இணங்காமை** | | | |
| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மாணங்களுடன் இணங்காத பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | | | |
| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** | |
| (அ) | பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவையின் XX ஆம் அத்தியாயத்தின் 3.1 மற்றும் 3.2ஆம் பிரிவுகள் | ஓவ்வொரு உயர் கல்வி நிறுவனத்திலும் வேலைக் கமர்த்தப்பட்ட ஒவ்வொரு நபரும் வருகைப் பதிவேட்டில் உள்வரும் மற்றும் வெளிச் செல்லும் நேரங்களை பதிவு செய்யவேண்டிய போதிலும் பல்கலைக்கழகத்தின் கல்விசார் பதவியணியினர் அவர்களின் உள்வருகை மற்றும் வெளிச்செல்லலை குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. ஆகையால் மீளாய் வாண்டின் போது 257 கல்விசார் பதவியணியினருக்கு அவர்களின் வருகையை உறுதிப்படுத்தாமல் பல்கலைக்கழகம் ரூபா 407,738,731.00 கூட்டுத் தொகையான சம்பளங்கள் மற்றும் ஊதியங்களை செலுத்தியிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்படுகிறது.<br><br>வழமையாக பல்கலைக்கழகங்களில் கல்விசார் பதவியணியினர் தங்கள் வரவுகளை பதிவதில்லை. |
| (ஆ) | <u>இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணங்கள்</u><br><br>நிதிப்பிரமாணங்கள் 102 – 104 | பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான வாகனமொன்று விபத்துக்குள்ளாகி இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அதன் மீது ரூபா 77,250.00 தொகையான திருத்தக்கிரயம் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் நட்டங்களின் அளவு மற்றும் காரணத்தை மதிப்பிடுவதற்கும் பொறுப்புக்களை நிர்ணயிப்பதற்கும் விசாரணைச் சபையை நியமிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. ரூபா 8,143,021.00 கூட்டுத்தொகையான | ஏற்றுக்கொள்ளப்படுகிறது.<br><br>ஒழுக்காற்று விசாரணையை மேற்கொள்வதற்காக விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டது, இதுதொடர்பில் தாமதம் இருப்பினும் இது நடாத்தி முடிக்கப்படும். |
| | நிதிப்பிரமாணம் 571 | 21 மீளளிக்கக் கூடிய வைப்புக்கள் 2 ஆண்டுகள் தொடக்கம் 12ஆண்டுகள் வரையிலான காலவீச்சில் இருந்தன. எனினும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இது தொடர்பில் அவசியமான நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படவில்லை<br><br>மீளளிக்கக் கூடிய வைப்புக்கள் சம்பந்தப்பட்டவர்களின் கோரிக்கையின் பேரில் குறிப்பிட்டகால முடிவில் மீளளிக்கப்படும். ஆகவே குறிப்பிட்ட மீளளிக்கக் கூடிய வைப்புக்கள் நடைமுறையற்ற சொத்துகளின்கீழ் காட்டப்பட்டுள்ளது.<br><br>மேற்குறிப்பிட்டதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும். |

| | கணக்காய்வுப் பத்தியின் மேற்கோள்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| **2.4** | **போதியளவு அதிகாரத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்** | |
| (அ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவையின் 3ஆம் அத்தியாயத்தின் 26:5ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்திலிருந்து உத்தியோகத்தர்களை தானாகவே வருகை விரிவுரையாளர்களின் பதவிக்கால நியமனம் செய்ய முடியாத போதிலும், பல்கலைக்கழகத்தின் 05 பீடங்களின் பதவியணியினரில் இருந்து 27 வருகை விரிவுரையாளர்களை பல்கலைக்கழகம் நியமணம் செய்திருந்ததுடன் மீயாள்வாண்டின் போது அந்த விரிவுரையாளர்களிற்கான கட்டணங்களாக ரூபா 696,250.00 மொத்தத் தொகையை செலுத்தியிருந்தது. | கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.<br><br>வேறுபட்ட துறைகளுக்கான வருகை விரிவுரையாளர்களின் கிடைப்பனவு குறைவாகவும் செலவும் அதிகமாகவும் உள்ளபடியால் பேரவையின் அனுமதியுடன் பீடங்களுக்கிடையிலான கற்பித்தலிற்கு குறிப்பிட்டளவு படி வழங்கப்படுகிறது. |
| (ஆ) | 2011 ஏப்பிரல் 20ஆம் திகதிய 01/2011 ஆம் இலக்க உயர் கல்விச் சுற்றறிக்கை மற்றும் 2014 பெப்ரவரி 11ஆம் திகதிய 02/2014ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம், ஆராய்ச்சிக் குழுவின் அங்கீகாரத்துடன் அவர்களின் ஆராய்ச்சி முன் மொழிவுகளை சமர்ப்பித்திருக்காத கல்விசார் பதவியணியினர் ஆராய்ச்சிப் படிகளை பெறுவதற்கு தகுதியற்றவர்களாவர். எவ்வாறாயினும், ஆராய்ச்சிக் குழுவிடமிருந்து அங்கிகாரத்தைப் பெற்றிருக்காத கலை மற்றும் கலாசா பீடத்தின் 53 கல்விசார் பதவியணியினர் மீளாய்வாண்டின் போது ரூபா 8,864,434.00 கூட்டுமொத்தமான ஆராய்ச்சிப் படிகளைப் பெற்றிருந்தனர். | ஏற்றுக்கொள்ளப்படவில்லை<br>அனைத்து திட்ட முன்மொழிவுகளுக்குமான கொடுப்பனவுகள்யாவும் பீட மற்றும் பல்கலைக்கழக ஆராய்ச்சிக் குழுவின் அங்கீகாரத்துடன் துணைவேந்தரின் அனுமதியுடன் வழங்கப்படுகிறது. |
| **3** | **நிதிசார் மீளாய்வு** | |
| **3.1** | **நிதிசார் விளைவுகள்**<br><br>சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய் வாண்டின்போது பல்கலைக்கழகத்தின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 157,502,871.00 தேசிய பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ரூபா 107,259,847.00 ஆன தேசிய பற்றாக்குறை ஒன்றினை விளைவித்திருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 50,243,024.00 ஆன முன்னேற்றம் ஒன்றினைக் காட்டுகிறது. மீண்டெழும் மாணியம் ரூபா 205,897,000.00 ஆல் அதிகரித்தமை இந்த முன்னேற்றத்திற்கு பிரதானமாக பங்களித்திருந்தது. | அவதானிக்கப்பட்டது. |

| கணக்காய்வுப் பத்தியின் மேற்கோள்கள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| 3.2 | **பல்கலைக்கழகத்தின் பெறுமதிச் சேர்க்கை**<br><br>மீளாய்வாண்டிற்கான தேறிய பற்றாக்குறை ரூபா 107,259,847.00 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது நாட்டிற்கான பல்கலைக்கழகத்தின் பங்களிப்பு ரூபா 874,297,000.00 ஆக இருந்தது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய நான்கு ஆண்டுகளின் போது நாட்டிற்கான பல்கலைக்கழகத்தின் பங்களிப்பு பின்வருமாறு உள்ளது. | அவதானிக்கப்படுகிறது. |

| | 2016<br>ரூபா<br>000 | 2015<br>ரூபா<br>000 | 2014<br>ரூபா<br>000 | 2013<br>ரூபா<br>000 |
|---|---|---|---|---|
| மிகை/ பற்றாக்குறை | (107,300) | (157,503) | (76,653) | (127,102) |
| கூட்டு: | | | | |
| • ஆளணி வேதனங்கள் | 790,536 | 704978 | 530130 | 453080 |
| • பெறுமாணத் தேய்வு | 191,061 | 173457 | 105759 | 82195 |
| மொத்தப் பங்களிப்பு | 981,597 | 878435 | 635889 | 535275 |
| பெறுமதி சேர்க்கை | 874,297 | 720932 | 559236 | 408173 |

**4 செயற்பாட்டு மீளாய்வு**

**44.1 செயலாற்றல்**

மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தின் கல்விசார் செயலாற்றல்கள் பின்வருமாறு உள்ளன.

**(அ) பட்டக்கற்கை நெறிகள்:**

மீளாய்வாண்டு மற்றும் கடந்த இரண்டு ஆண்டுகளின் போது ஒவ்வொரு பீடத்திற்கும் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| பீடங்கள் | சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| | **2016** | **2015** | **2014** |
| கலை மற்றும் கலாச்சாரம் | 386 | 104 | 450 |
| வணிக மற்றும் முகாமைத்துவம் | 182 | 184 | 200 |
| விஞ்ஞானம் | 138 | 90 | 90 |
| சுகாதாரப் பராமரிப்பு விஞ்ஞானம் | 80 | 201 | 300 |
| விவசாயம் | 42 | 80 | 120 |
| தொடர்பாடல் மற்றும் வணிகக்கல்வி | 148 | 136 | 151 |
| பிரயோக விஞ்ஞானம் | 35 | 31 | 92 |
| சித்த மருத்துவப் பிரிவு | 48 | 49 | 51 |
| **மொத்தம்** | **1,059** | **875** | **1,454** |

| | கணக்காய்வுப் பத்தியின் மேற்கோள்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| | (i) மீளாய்வாண்டின் போது சுகாதாரப் பராமரிப்புவிஞ்ஞான பீடம் மற்றும் விவசாய பீடம் என்பவற்றிற்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளல் 2014ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது முறையே 73 சதவீதத்தாலும், 65சதவீதத்தாலும் குறைவடைந்திருந்த அதேநேரம் 2016ஆம் ஆண்டின் போது விஞ்ஞான பீடத்திற்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளல் 2014ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 53 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. | மாணவர் ஒதுக்கீடு/அனுமதி தொடர்பான செய்முறைகள்யாவும் பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுவதுடன் மாணவர் அனுமதியானது பல்கைலக்கத்தினால் அவ் ஒதுக்கீட்டடிப்படையிலேயே மேற்கொள்கின்றது. |
| | (ii) மீளாய்வாண்டின் போது அனைத்துப் பீடங்களிற்கான மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளல் 2014ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 27 சதவீதத்தால்குறைவடைந்திருந்தது. | மேலும் ஒருதொகுதி விசேட அனுமதி 2014ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. |
| **(ஆ)** | **மாணவரொருவருக்கான கிரயம்**<br><br>மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரண்டு ஆண்டு காலப்பகுதிக்காக பல்கலைக்கழகத்தில் பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை மற்றும் செயற்பாட்டுச் செலவினங்களை அடிப்படையாகக் கொண்டு மாணவரொருவருக்கான கிரயம் கீழே காண்பிக்கப் பட்டுள்ளன. | |

| | 2016 | 2015 | 2014 |
|---|---|---|---|
| மொத்தக் கிரயம் (ரூபா ‘000) | 1,296,021 | 1,143,866 | 879,368 |
| மாணவர்களின் மொத்த எண்ணிக்கை | 4,438 | 4,890 | 4,467 |
| மாணவரொருவருக்கான கிரயம் (ரூபா) | 292,028 | 233,919 | 196,859 |

| | கணக்காய்வுப் பத்தியின் மேற்கோள்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| | (i) 2016ஆம் ஆண்டிற்கான பல்கலைக்கழகத்தின் மாணவரொருவருக்கான கிரயம் 2014ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 48சதவீதத்தால் அதிகரித்திருந்தது. | அவதானிக்கப்படுகிறது.<br><br>எமது பல்கலைக்கழக மாணவரொருவருக்கான கிரயம் அதிகரித்து காணப்படுவதற்கான காரணம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி அமைச்சின் வேண்டுகோளுக்கிணங்க எமது பல்கலைக்கழகம் மட்டுமே அனைத்து மாணவர்களுக்குமான விடுதி வசதிகளை வழங்கிவருகிறது. |
| | (ii) 2016ஆம் ஆண்டிற்கான பல்கலைக்கழகத்தின் மாணவரொருவருக்கான கிரயம் ரூபா 292,028.00 தொகையான அதே நேரம் அந்த ஆண்டிற்கான யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் மாணவரொருவருக்கான கிரயம் ரூபா 266,178.00 தொகையாக இருந்தது. அதற்கிணங்க, பல்கலைக்கழகத்தின் மாணவரொருவருக்கான கிரயமானது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மாணவரொருவருக்கான கிரயத்தை விட ரூபா 25,850.00 ஆல் உயர்வாக இருந்தது. | |

| | கணக்காய்வுப் பத்தியின் மேற்கோள்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| **(இ)** | **கற்றல்களுக்காக விடுமுறை வழங்கல்**<br><br>ஐக்கிய இராச்சிய பெட்போட்சயர் (Bedfordshire) பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்கு முன்னோடியாக தத்துவவியல் முதுமானி பாடநெறியை கற்பதற்காக 2011 ஒக்தோபர் 03 தொடக்கம் 2015 ஏப்ரல் 02 வரையான மீளாய்வுக் காலப்பகுதியின் போது விரிவுரையாளரிற்கு (நன்னடத்தை) 45 மாதங்கள் கொடுப்பனவுடனும், 06 மாதங்கள் கொடுப்பனவின்றியும் கல்வி விடுமுறையை பல்கலைக்க்ழகம் வழங்கியிருந்ததுடன் ரூபா 9.2 மில்லியன் நிதி உதவியை செலுத்தியிருந்தது. எவ்வாறாயினும், விரிவுரையாளர் 02 ஆண்டுகள் கடந்த பின்னரும் கூட அவரது கலாநிதிப்பட்ட கற்றல்களை பூர்த்தி செய்திருக்கவில்லை. 2017 மே 15 இலிருந்து செயற்பாட்டிற்கு வரும் வகையில் உரிய விரிவுரையாளர் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளாரென 2017 மே 15இல் இது தொடர்பில் உபவேந்தர் எனக்கு அறிவித்திருந்தார். | ஏற்றுக்கொள்ளப்படுகிறது.<br><br>குறிப்பிட்ட விரிவுரையாளர் தனது கலாநிதிப்பட்ட கற்றல்களை குறிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யவில்லை என்பதுடன் அவர் 15.05.2017 முதல் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். அவரது கல்வி விடுமுறையானது ஏற்கனவேயுள்ள சுற்றுநிருப விதிமுறைகளுக்கமைவாகவே வழங்கப்பட்டுள்ளது.<br><br>இவருக்ககான நிதி உதவி HETC மற்றும் NCAS திட்டங்களுடாக அவரின் திட்ட முன்மொழிவின் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. |
| **(ஈ)** | **வருகை விரிவுரையாளர்களின் செயலாற்றல்**<br><br>மீளாய்வாண்டின் போது சுகாதார பராமரிப்பு விஞ்ஞான பீடத்தில் விரிவுரைகளை நடாத்துவதற்கு 52 வருகை விரிவுரையாளர்களை பல்கலைக்கழகம் நியமித்திருந்ததுடன் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்ட காலப்பகுதிக்குள் பாடத்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு வேண்டப்பட்டிருந்தனர். எவ்வாறாயினும், ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்ட விரிவுரை மணித்தியாலங்கள் 06 மணித்தியாலங்கள் தொடக்கம் 101 மணித்தியாலங்கள் வரையான வீச்சில் விரிவுரை மணித்தியாலங்கள் அவ் விரிவுரையாளர்களால் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் அதனால் அவர்களின் விரிவுரை காலப்பகுதியின் போது அவ்விரிவுரையாளர்கள் முழுப்பாடத்தையும் பூர்த்தி செய்திருந்தார்களா என்பது கேள்விக்குரியதாகவுள்ளது. விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன. | ஏற்றுக்கொள்ளப்படவில்லை.<br><br>ஒதுக்கப்பட்ட வருகை விரிவுரை மணித்தியாலங்களுக்கான பாடத்திட்டங்கள் பின்வருமாறு பூர்த்தி செய்யப்பட்டது:<br><br>1. மருத்துவ விஞ்ஞானம்:<br>• தங்கள் கல்வி விடுப்பு முடிந்தபின் திரும்பிவந்த சில நிரந்தா விரிவுரையாளர்கள்மூலம்.<br>• போதனா வைத்தியசாலையில் வேறு சில வைத்திய ஆலோசகர்களால் நேரடி நோயாளரருகிலான கற்பித்தல் மூலம்.<br><br>2. சட்ட மருத்துவம்:<br><br>நியமிக்கப்பட்ட வருகை விரிவுரையாளர்கள் (போதனா வைத்தியசாலை ஆலோசகர்கள்) அடமாற்றம் பெற்று சென்றதனால் மிகுதியாக இருந்த 06 மணித்தியாலங்களும் சுய இயக்க கற்றல்மூலம் பூர்த்திசெய்யப்பட்டது. |

<table>
<tr><th></th><th>கணக்காய்வுப் பத்தியின் மேற்கோள்கள்</th><th>அவதானிப்புக்கள்</th></tr>
<tr><td>(ஈ)</td><td>
<table>
<tr><th>பாடம்</th><th>ஒதுக்கப்பட்ட மொத்த மணித்தியாலங்கள்</th><th>பூர்த்தி செய்யப்பட்ட மொத்த மணித்தியாலங்கள்</th><th>பூர்த்தி செய்யப்படாத விரிவுரை மணித்தியாலங்கள்</th></tr>
<tr><td>மருத்துவம்</td><td>55</td><td>14.5</td><td>40.5</td></tr>
<tr><td>அறுவைச் சிகிச்சை</td><td>110</td><td>27</td><td>83</td></tr>
<tr><td>குழந்தையியல்</td><td>118</td><td>17</td><td>101</td></tr>
<tr><td>தடயவியல் மருத்துவம்</td><td>30</td><td>24</td><td>06</td></tr>
<tr><td>இறப்பின் புலனாய்வு</td><td>08</td><td>02</td><td>06</td></tr>
<tr><td>இரத்த நிணநீர் முறைமை குறைபாடுகள்</td><td>20</td><td>02</td><td>18</td></tr>
<tr><td>அமைப்பு மற்றும் தசை மண்டல முறைமைக் குறைபாடுகள்</td><td>20</td><td>07</td><td>13</td></tr>
</table>
</td><td>3. ஏனையவை:<br>• கல்வி விடுப்பு முடிந்தபின் திரும்பிவந்த சில நிரந்தர விரிவுரையாளர்கள்மூலமும்<br>• தற்காலிக விரிவுரையாளர்கள்மூலமும்</td></tr>
<tr><td colspan="3">4.2 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்</td></tr>
<tr><td>(அ)</td><td>கணனிகள் மற்றும் சேவர்களின் (Servers) கொள்வனவு<br><br>மீளாய்வாண்டின் போது ரூபா 20,227,663.00 பெறுமதியான 212 மேசைக் கணனிகளையும் 07 சேவர்களையும் பல்கலைக்கழகம் கொள்வனவு செய்திருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.</td><td></td></tr>
<tr><td></td><td>(i) மாணவர் ஆய்வுகூடத்தை ஸ்தாபிப்பதற்காக 2016 ஜுன் 07இல் தகவல் மற்றும் தொடர்பாடல தொழில்நுட்பத்திற்கான நிலையத்திற்கு (CICT) 75 கணனிகள் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அத்தகைய ஆய்வுகூடம் இதுவரை ஸ்தாபிக்கப்பட்டிருக்காததுடன் அதனால் ஒரு ஆண்டாக அக்கணனிகள் பயனற்றிருந்தன.</td><td>ஏற்றுக்கொள்ளப்படுகிறது.<br><br>தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்திற்கான நிலையம் (CICT) கடந்தவாரம் 75 நாற்காலிகளை பெற்றுக்கொண்டதுடன் அனைத்து கணனிகளும் தற்போது பயன்பாட்டிற்காக தயாராகவுள்ளன.</td></tr>
<tr><td></td><td>(ii) 2016 ஏப்ரல் 18இல் கணனி ஆய்வுகூடப் பயன்பாட்டிற்காக ரூபா 3,323,530.00 மொத்தப் பெறுமதியான இருபத்து நான்கு கணனிகள் மற்றும் 02 சேவர்கள் கணிதப் பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், 24 கணனிகளில் 10உம், 02 சேவர்களும், கணனி மேசைகள், கதிரைகள் மற்றும் இணையத் தொடர்பு வசதிகள் போன்றன இல்லாமை காரணமாக ஒரு ஆண்டாக பிரிவில் பயனற்றிருந்தன.</td><td>ஏற்றுக்கொள்ளப்படுகிறது.<br><br>கணனி மேசைகள் மற்றும் நாற்காலிகளை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளதுடன் இணையத் தொடர்பு வசதிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது.</td></tr>
</table>

| கணக்காய்வுப் பத்தியின் மேற்கோள்கள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| | (iii) ரூபா 4,364,559.00 பெறுமதியான முப்பத்தைந்து கணனிகள் மற்றும் 02 சேவர்கள் 2016 மே 05இல் உயிர் முறைமை தொழில்நுட்ப பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், ஒரு கணனி தவிர அனைத்து ஏனைய 34 கணனிகளும் கணனி மேசைகள், கதிரைகள் மற்றும் இணையத் தொடர்பு வசதிகள் போன்றன இல்லாமை காரணமாக 2017 ஏப்ரல் 20 வரை பயன்படுத்தப்படாதிருந்தன. | ஏற்றுக்கொள்ளப்படுகிறது.<br><br>குறிப்பிட்ட கணனிகள்யாவும் கணனி ஆய்வுகூட திருத்தவேலை காரணமாக பயன்படுத்தப்படாதிருந்தன. தற்போது திருத்தவேலை முடிவடைந்தபடியால் பயன்பாட்டிற்காக தயாராகவுள்ளன. |
| **(ஆ)** | **மைக்கிறோரொம் (microtome) இன் கொள்வனவு – பைன்சே325 (finesse325)**<br><br>தாவரவியலை அவர்களின் பட்டக் கற்கை நெறியாக தெரிவு செய்கின்ற மாணவர்களால் பயன்படுத்துவதற்காக தாவரவியல் பிரிவின் தலைவரால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுதல் மீது ரூபா 1,325,000.00 கிரயத்தில் 2016 பெப்ரவரி 15இல் மைக்றோரொம் - பைன்சே325 ஐ பல்கலைக்கழகம் கொள்வனவு செய்திருந்தது. எவ்வாறாயினும், அவர்களின் விஷேட கற்கைநெறியாக தாவரவியலை தெரிவு செய்வதற்காக விஷேட பட்டக் கற்கைநெறி மாணவர் காணப்பட்டதால் 2017 ஜுன் 20 வரை இது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படவில்லை.<br><br>இது தற்போது விரிவுரையாளர்களின் ஆராய்ச்சி தேவைகளுக்காக பயன்பாட்டிலுள்ளது. |
| **4.3** | **முகாமைத்துவப் பலவீனங்கள்** | |
| (அ) | பதவிகள் வறிதாக்கப்பட்ட மற்றும் சேவைகளிலிருந்து ஓய்வு பெற்ற 222 கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியினரின் ரூபா 10,124,628.00 கூட்டுத் தொகையான கடன் மீதிகள் 05 ஆண்டுகள் தொடக்கம் 28 ஆண்டுகள் வரையான காலவீச்சில் நிலுவையாக இருந்தன. ஏவ்வாறாயினும், செல்லுபடியாகும் பிணைகள் எதனையும் பெற்றுக்கொள்ளாமல் மேற்குறிப்பிட்ட கடன்கள் வழங்கப்பட்டிருந்ததால் இந் நிலுவை மீதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எதனையும் எடுப்பதற்கு பல்கலைக்கழகத்தால் முடியாதிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்படுகிறது.<br><br>நிலுவைக் கடன் மிகுதியை மீளப் பெறுவதற்கு பின்வரும் நடவடிக்கை எடுக்கப்படும்/படவுள்ளது:<br><br>• **சேவையிலிருந்து இடை நிறுத்தப்பட்டோர் தொடர்பில்:**<br>மேற் கூறப்பட்ட அலுவலர்கள் தங்களது பல்கலைக்கழக சேமலாப நிதியை தற்போது வரை கோரவில்லை. பல்கலைக்கழக சேமலாப நிதிக்காக விண்ணப்பிக்கும் போது நிலுவைத் தொகையிலிருந்து செலுத்தப்படாத கடன்கள் மற்றும் சம்பள முற்பணங்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்படும்.<br>• **பதவி விடுமுறை வழங்கப்பட்டோர் மற்றும் ஒப்பந்தத்தை மீறியோர் தொடர்பில்:**<br>சட்டமா அதிபருடன் ஆலோசித்து குறிக்கப்பட்ட ஊழியர்களிடமிருந்து அறவிடவேண்டிய கடன் மிகுதித் தெகையை அவர்களது ஒப்பந்தத் தொகையை மீளச்செலுத்தும் போது அறவிட சட்ட நடவடிக்கை |

| கணக்காய்வுப் பத்தியின் மேற்கோள்கள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| | | • **ஓய்வுபெற்ற ஊழியர்கள் தொடர்பில்:** கடிதங்களை அனுப்புவதன் மூலம் ஓய்வு பெற்ற ஊழியர்களிடமிருந்து கடன் மற்றும் சம்பள முற்பணங்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் "கொடுப்பனவுகள் இல்லை" என்ற சான்றிதழ் வழங்குவதற்குப் பொறுப்பான அதிகாரிகளை அடையாளம் காண நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவர்களிடமிருந்து இத்தொகையை மீட்டெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.<br>• **ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு / அரசாங்க அலுவலகங்களுக்கு இடமாற்றம் பெற்ற உத்தியோகத்தர் தொடர்பில்:**<br>மாற்றலாகிச் சென்ற ஊழியர்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் ஆலோசிக்கப்பட்டு கடன் மற்றும் சம்பள முற்பணங்களை அறவிடுவதற்கு ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>மேலும் 2005ஆம் ஆண்டிற்கு முற்பட்ட ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதுடன் 2009க்கு முற்பட்ட காலப்பகுதிக்கான குறைபாடுகளை கூடியளவு தீர்க்கவேண்டியுள்ளதால் பேரவை இத்தொகையினை பதிவழிப்பு செய்ய அங்கீகாரம் வழங்கியுள்ளதுடன் மேல் நடவடிக்கைக்காக உயர்கல்வி அமைச்சினால் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | கலை மற்றும் கலாசார பீடத்தின் விரிவுரையாளர் ஒருவரிடமிருந்து ரூபா 6,452,912.00 தொகை அவரது உடன்படிக்கையை மீறியதற்காக பிணைமுறிப் பெறுமதியாக அறவிடப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், அவர் நாட்டிற்கு திரும்பியிருந்ததுடன் சேர்.ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு அக்கடமியில் உதவி நூலகராக இணைந்திருந்ததுடன் கிழக்குப் பல்கலைக் கழகத்தின் வருகை விரிவுரையாளராகவும் கடமையாற்றி இருந்த போதிலும் அவரிடமிருந்து மேற்படி தொகையை அறவிடுவதற்கு 10 ஆண்டுகளிற்கு மேலாக பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பகுதியளவில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.<br><br>கி.ப.க கணக்காய்வு குழுவானது இவ்விடயம் தொடர்பில் தீவிர அக்கறை கொண்டிருந்நதுடன் அதன் வழிநடத்தலின் படி குறிப்பிட்ட விரிவுரையாளருக்கு 28.12.2016 திகதியிடப்பட்டு ஒரு கடிதம் முறையான பதவிவழியூடாக அனுப்பப்பட்டுள்ளதுடன் மேலும் சட்டமா அதிபர் திணைக்கடத்தின் சட்டநடவடிக்கையும் எடுக்கப்படவுள்ளது.<br><br>அனுப்பப்பட்டுள்ள கடிதத்திற்கான பதில் எதிர்பார்க்கப்படுகிறது. |

| | கணக்காய்வுப் பத்தியின் மேற்கோள்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (இ) | தத்துவவியல் விரிவுரையாளர் பதவிக்காக விண்ணப்பித்திருந்த உத்தியோகத்தர் ஒருவர் அப் பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட உத்தியோகத்தரை விட போதியளவு தகைமைகள் மற்றும் அனுபவத்தினை கொண்டிருந்த போதிலும் அப்பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக அவர் புறக்கணிக்கப் பட்டிருந்ததால் அவர் மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்றை தொடுத்திருந்தார். இது தொடர்பில் அந்த உத்தியோகத்தரிற்கு இழப்பீடாக ரூபா 1,000,000.00 செலுத்துவதற்கு மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பளித்ததுடன் அதில் ரூபா 500,000.00 அவருடன் இணக்கபபாட்டிற்கு வந்தபின்னர் உத்தியோகத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. மேலும், பல்கலைக்கழகம் சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்காக சட்டக் கட்டணமாக ரூபா 1,098,169.00 தொகையை செலவிட்டிருந்தது. இதன் விளைவாக, ஆட்சேர்ப்பு செயன் முறையிலுள்ள ஒழுங்கீனங்கள் காரணமாக ரூபா 1,598,169.00 நட்டம் பலகலைக்கழகத்தில் நிலைத்திருந்தது. எவ்வாறாயினும், பல்கலைக்கழகமானது அத்தகைய ஒழுங்கீனங்களுக்கு பொறுப்பாக உள்ள உத்தியோகத்தருக்கு எதிராக நடவடிககை எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுகிறது.<br><br>இது ஒரு முறைகேடல்ல ஒரு தேர்வு செயல்முறையாகும். திட்டமிட்ட முறைகேடு என நிரூபிக்கப்படாத பட்சத்தில் தேர்வுக்குழுவை தண்டனைக்குட்படுத்த முடியாது. பேரவை அதன் 27.08.2016 அன்று நடைபெற்ற அதன் 268ஆவது கூட்டத் தீர்மானத்தின்படி இரு தரப்பினரும் சட்டரீதியான மோதலையும் செலவினையும் தவிர்ப்பதற்காக தமது சட்ட ஆலோசகக்களுடாக ஒரு இணக்கப்பாட்டிற்கு வந்ததுடன் சம்பந்தப்பட்ட நபருக்கு ரூபா 500,000.00 அவரின் இணக்கபபாட்டுடன் செலுத்தப்பட்டது. |
| (ஈ) | திருகோணமலை வளாகமானது விடுதிக் கட்டடத் தொகுதியொன்றை நிர்மாணித்திருந்ததுடன் 2015 பெப்ரவரி மாதத்தில் இந்தக் கட்டிடம் திறந்து வைக்கப்பட்டிருந்தது. மேலும், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை இந்தக் கட்டடத்திற்கு நீர் வழங்கல் இணைப்பினை வழங்கியிருந்ததுடன் இந்தக் கட்டடத்திற்குப் பொருத்தப்பட்ட நீர்மாணி மண்ணால் மூடப்பட்டிருந்தது. ஆகையால் 2015 திசெம்பர் மாதம் வரை மாதாந்த தண்ணீர்ப் பட்டியல் கட்டணங்களாக மதிப்பிடப்பட்ட மிகப் பெறுமதித் தொகையை சபை அறவிட்டிருந்தது. பின்னர் சபையானது மேற்குறிப்பிட்ட காலப்பகுதிக்கான தண்ணீர் வலைப்பட்டியலாக ரூபா 4,775,936.00 ஆன மிகப் பெரிய தொகையை அறவிட்டிருந்ததுடன் 2015 நவம்பர் 11 தொடக்கம் 2016 சனவரி 18 வரையான காலப்பகுதியின் போது இந்தத் தொகையை செலுத்தியிருந்தது. எவ்வாறாயினும், உள்ளபடியான மானி வாசிப்புகளின் பிரகாரம் கட்டணங்களைக கணிப்பீடு செய்வதற்கு மானி வாசிப்பிற்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்கு தவறியிருந்த பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிற்கு எதிராக பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுகிறது.<br><br>நிலத்தடியில் ஒரு பெரிய நீர்க்கசிவு ஏற்பட்டிருந்ததை எவ்வழியிலும் பராமரிப்பு பிரிவினரால் கண்டுபிடிக்க முடியாதிருந்தது. அத்துடன் அந்நேரம் நீர்மானியும் நிறுவப்பட்டிருக்கவில்லை. திரட்டிய நீர்பாவனை சிட்டை கிடைக்கப்பெற்றபோதுதான் குறிப்பிட்ட நீர்வழங்கல் முறைமை பரிசீலிக்கப்பட்டு நீர்க்கசிவு கண்டுபிடிக்கப்பட்டு சீர்செய்யப்பட்டது. |

| | கணக்காய்வுப் பத்தியின் மேற்கோள்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (உ) | வெளிநாடுகளில் முதுமாணிப் பட்டங்களைத் தொடர்வதற்கு கொடுப்பனவுடன் கற்றல் விடுமுறையைப் பெற்ற பின்னர் உடன்படிக்கையை மீறுவது பல்கலைக்கழக பதவியணியினரின் பொதுவான நடைமுறையாக உள்ளது. ஏவ்வாறாயினும், அவர்களிடமிருந்து செல்லுபடியாகும் பிணையைப் பெறுவதற்கோ அவர்களது ஊழியர் சேமலாப நிதியிலிருந்து பிணைமுறிப் பெறுமதியை கழிப்பதற்கான ஒத்துழைப்பை பெறுவதற்கோ பலகலைக்கழகம் .இதுவரை நடவக்கை எடுத்திருக்கவில்லை. இதற்கிணங்க அவர்களது உடன்படிக்கையை மீறியதற்காக ரூபா 159,990,645.00 ஆன மொத்தத் தொகை பிணைமுறிப் பெறுமதியாக 71 உத்தியோகத்தர்களிடமிருந்து 10 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருந்தது. எவ்வாறாயினும், பல்கலைக்கழகம் அவர்களிடமிருந்து செல்லுபடியாகும் பிணைகளை பெற்றுக்கொள்ளாததன் காரணமாக இந்நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | பகுதியளவில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.<br>• சட்ட நடவடிக்கைகளுக்காகவும் தவறியவர்களிடமிருந்து பெறவேண்டிய பணத்தை அறவிடுவதற்காகவும் 12 வழக்குகளுடன் 74 எண்ணிக்கையான கடப்பாடு ஒப்பந்தத்தை மீறியோரது வழக்குகள் உள்ளடங்கலாக சட்டமா அதிபர் அலுவலகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன. இரண்டு அரச வழக்கறிஞர்கள் இவற்றைக் கையாளுகின்றனர். 10 மில்லியனுக்கும் அதிகமான தொகை தற்போது வரை கடப்பாட்டு ஒப்பந்தத்தை மீறியோரிடமிருந்து மீளப் பெறப்பட்டுள்ளது.<br>• சட்டமா அதிபர் திணைக்களம் பத்து வருடங்களுக்கு உட்பட்ட வழக்குகள் தொடர்பில் முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதெனவும், பத்து வருடங்களுக்கு மேற்பட்ட வழக்குகள் தொடர்பில் பின்னர் ஆராய்வதெனவும் அறிவித்துள்ளது.<br>• சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையுடன் சட்ட நடவடிக்கை தற்போது முன்னெடுக்கப்படுகிறது. |
| (ஊ) | பல்வேறு வினியோகஸ்தர்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 28,542,535.00 கூட்டுத் தொகையான முற்பணங்கள் 2 ஆண்டுகள் தொடக்கம் 20 ஆண்டுகள் வரையான காலவீச்சில் அறவிடப்படாதிருந்தன. எவ்வாறாயினும் 2015ஆம் ஆண்டிற்கான எனது கணக்காய்வு அறிக்கையில் இந்த விடயம் சுட்டிக் காட்டப்பட்ட போதிலும் 2017 ஜுன் 20 வரையிலும் அவர்களிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கையை பல்கலைக்கழகம் எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுகிறது.<br>அனேகமான விற்பனையாளர்களுக்கு முற்பணங்கள் 1990ஆம் ஆண்டிற்கு முன்னரே வழங்கப்பட்டிருந்தன. அக்காலப்பகுதியில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகளால், மேற்படி பொருட்களுக்கான கொடுப்பனவுகளை கொழும்பைத் தளமாகக்கொண்ட வழங்குனர்களுக்கு அவ்விடத்திலேயே வழங்கப்படவேண்டியிருந்தது.<br>இதனால் மேற்படி கொள்வனவுக்கான கொடுப்பனவுகள் முற்பண முறைப்படி சீர்செய்யப்படும் பொருட்டு முற்பண அடிப்படையில் அவர்களுக்கு காசோலை மூலம் வழங்கப்பட்டது. ஆயினும் பொருட்கள் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னும் இவ் முற்பணக் கொடுப்பனவுகள் சீர்செய்யப்படவில்லை. இது சீராக்கப்படும். |

| | கணக்காய்வுப் பத்தியின் மேற்கோள்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (எ) | 67 வெளிநாட்டு வழங்குனர்களிற்கு வழங்கப்பட்ட ரூபா 2,267,842.00 கூட்டுத்தொகையான முற்பணங்கள் அந்த முற்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் 12 ஆண்டுகளிற்கு மேலாகக் காணப்பட்டிருந்தன. | ஏற்றுக்கொள்ளப்படுகிறது.<br><br>அனேகமான வெளிநாட்டு வழங்குனர்களிற்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் 1990ஆம் ஆண்டிற்கு முன்னரே வழங்கப்பட்டிருந்தன. அக்காலப்பகுதியில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகளால், மேற்படி பொருட்களுக்கான கொடுப்பனவுகளை கொழும்பைத் தளமாகக்கொண்ட வழங்குனர்களுக்கு அவ்விடத்திலேயே வழங்கப்படவேண்டியிருந்தது.<br><br>இதனால் மேற்படி கொள்வனவுக்கான கொடுப்பனவுகள் முற்பண முறைப்படி சீர்செய்யப்படும் பொருட்டு முற்பண அடிப்படையில் அவர்களுக்கு காசோலை மூலம் வழங்கப்பட்டது. ஆயினும் பொருட்கள் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னும் இவ் முற்பணக் கொடுப்பனவுகள் சீர்செய்யப்படவில்லை. இது சீராக்கப்படும். |
| (ஏ) | உத்தியோகத்தர்களிற்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் அவை வழங்கப்பட்ட நோக்கம் பூர்தியடைந்த பின்னர் உடனேயே தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், பல்வேறு நோக்கங்களிற்காக 164 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 18,088,502.00 கூட்டுத்தொகையான முற்பணங்கள் 7 ஆண்டுகளிற்கு மேலாக தீர்ப்பனவு செய்யப்படாதிருந்தன. | ஏற்றுக்கொள்ளப்படுகிறது.<br><br>தீர்க்கப்படாத முற்பண மிகுதியை மீளப் பெறுவதற்கு கணக்காய்வு குழு மற்றும் நிதி குழுவின் ஆலோசனையுடன் பின்வரும் நடவடிக்கை எடுக்கப்படும்.்.படவுள்ளது:<br>• 2006 ஆம் ஆண்டிலிருந்து அன்றுவரை தீர்க்கப்படாத முற்பண மிகுதியை செலுத்தாத ஊழியர்கள், உத்தியோகத்தர்களிடமிருந்து அவற்றை அறவிட நடவடிக்கை எடுக்கப்படும்.<br>• மேலும் 2005ஆம் ஆண்டிற்கு முற்பட்டகால ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதுடன் 2009க்கு முற்பட்ட காலப்பகுதிக்கான குறைபாடுகளை கூடியளவு தீர்க்கவேண்டியுள்ளதால் பேரவை இத்தொகையினை பதிவழிப்பு செய்ய அங்கீகாரம் வழங்கியுள்ளதுடன் மேல் நடவடிக்கைக்காக உயர்கல்வி அமைச்சினால் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. |
| (ஐ) | முற்பணமாகப் பதவியணியினரால் வேண்டப்பட்ட தொகை எதுவும் வேண்டப்பட்ட தொகையின் தன்மை மற்றும் நியாயத் தன்மையை மதிப்பிடாமல் பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக 3 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்ட ரூபா 38,500.00 கூட்டுத்தொகையான முற்பணங்கள் காசு மூலம் முழுமையாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் 16 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்ட ரூபா 482,750.00 கூட்டுத் தொகையான முற்பணங்களின் 50 சதவீதம் காசு மூலம் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. இந்த நடைமுறையானது பொது நிதிகளை மோசடி செய்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்கியிருந்தது | அவதானிக்கப்பட்டது.<br><br>தற்போது முற்பண வழங்கல்முறையானது ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதுடன் ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் அவற்றை குறிக்கப்பட்ட காலப்பகுதியினுள் தீர்ப்பனவு செய்யும்படி அறிவுறுத்தப்படுகின்றனர். |

| | கணக்காய்வுப் பத்தியின் மேற்கோள்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| **4.4** | **நிதிகளின் பயன்பாடு** | |
| | நாட்பட்ட சிறுநீரக நோய்கள், விஞ்ஞான, பொறியியல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான விடயங்கள் மற்றும் குடியியல் சமூக கலாச்சாரம் மற்றும் பொருளாதார விடயங்கள் தொடர்பாக ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக 2016ஆம் ஆண்டின் போது மூலதன மானியங்களின் கீழ் பெறப்பட்ட ரூபா 6,500,000.00 கூட்டுமொத்தமான நிதிகள் குறிப்பிடப்பட்ட நோக்கங்களிற்காக பயன்படுத்தப்படாமல் 2017 ஜூன் 20 வரை வங்கி நடைமுறைக் கணக்கில் காணப்பட்டது. | ஏற்றுக்கொள்ளப்படுகிறது.<br><br>இது முன்கொண்டு செல்லும நிலுவை அடிப்படையிலான மானியமாகையால் தொடர்ந்தும் பயன்படுத்தப்படும். |
| **4.5** | **மனித வளங்கள் முகாமைத்துவம்** | |
| (அ) | 2015 ஜனவரி 31இலிருந்து பதிவாளர் பதவி வெற்றிடமாக இருந்தபோதிலும் பல்கலைக்கழகமானது அந்த பதவிக்கு நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கு இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படவில்லை.<br>பல்கலைக்கழகமானது ஜனவரி 2015மற்றும் மீளாய்வாண்டின் மே 2016ல் பதிவாளர் பதவி தொடர்பாக விளம்பரபடுத்தல்களை மேற்கொண்டபோதிலும் நேர்முகப் பரீட்சைகளின்போது எவரும் தெரிவுசெய்யப்படவில்லை. மேலும் 28 ஜூன் 2017ல் விளம்பரபடுத்தப்பட்டுள்ளதுடன் அதற்கான முடிவு திகதி 27.07.2017 ஆகும். |
| (ஆ) | பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்களின் இருபத்தொரு பதவிகள் பல ஆண்டுகளாக வெற்றிடமாக இருந்தன. இந்த நிலைமை மாணவர்களின் கல்வி சார் நடவடிக்கைகளை மோசமாகப் பாதித்திருந்த போதிலும் இது தொடர்பில் முறையான நடவடிக்கையை பல்கலைக்கழகம் எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படவில்லை.<br>பல்கலைக்கழகமானது கல்வியணி மற்றும் கல்வி உதவயணி சார் பதவி தொடர்பாக விளம்பரபடுத்தல்களை 2012 தொடக்கம் 2016 வரை பலதடவைகள் மேற்கொண்டது. அதனடிப்படையில் நேர்முகப்பபீட்சைக்கு தோற்றியவர்களில் பொருத்தமானவர்கள் நியமிக்கப்பட்டனர். தாவரவியல்துறை பேராசிரியர் பதவிக்கான வெற்றிடம் நிரப்பப்பட்டது. |
| **5.** | **கணக்களிப்பொறுப்பும˙ நல்லாளுகையும்** | |
| **5.1** | **செயல் நடவடிக்கைத் திட்டம்** | |
| | 2014 பெப்ரவரி 17ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 04ஆம் பிரிவின் பிரகாரம், நாளதுவரையாக்கப்பட்ட அமைப்புக் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும், உள்ளபடியான பதவியணியினரும், கட்டுநிதித் தேவைப்பாடுகள், நோக்கங்கள் மற்றும் தூரநோக்கினை அடைவதற்கான நடவடிக்கைகள் போன்ற தகவல்களை வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் உள்ளடக்க வேண்டிய போதிலும் 2016ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழகத்தால் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டம் மேற் குறிப்பிடப்பட்ட தகவல்களை உள்ளடக்கியிருக்கவில்லை. | அவதானிக்கப்பட்டது.<br><br>எதிர்காலத்தில் சீராக்கப்படும். |

<table>
<tr><th colspan="2">கணக்காய்வுப் பத்தியின் மேற்கோள்கள்</th><th>அவதானிப்புக்கள்</th></tr>
<tr><td colspan="3">6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்</td></tr>
<tr><td></td><td>கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்குக் காலம் பல்கலைக்கழக உபவேந்தரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றம் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.
<table>
<tr><th>முறைமை மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள்</th><th>அவதானிப்புகள்</th></tr>
<tr><td>(அ)முற்பணங்களின் தீர்ப்பனவு</td><td>முற்பணங்களின் தீர்ப்பனவிலுள்ள நீண்ட காலதாமதங்கள்</td></tr>
<tr><td>(ஆ)ஆளணி நிர்வாகம்</td><td>நிரந்தர பதவியணியினரை நியமணம் செய்வதன் மூலம் சிரேஷ்ட முகாமையாளர்களிற்கான வெற்றிடங்கள் நிரப்பப் படாமை மற்றும் கல்விசார் பதவியணியி னரின் உள்வருகை மற்றும் வெளிச்செல்லல் பதிவு செய்யப் படாமை.</td></tr>
<tr><td>(இ)நூலக நிர்வாகம்</td><td>பொருள் மெய்யாய்வுகளை நடாத்தத் தவறுதல்</td></tr>
</table>
</td><td>அவதானிக்கப்பட்டது.</td></tr>
</table>

**பேராசிரியர் த ஜெயசிங்கம்**
**உபவேந்தர்,**
**கிழக்குப் பல்கலைக்கழகம்,**
**02 ஆகஸ்ட் 2017**